பக்கங்கள்: 13 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 பங்குனி 23 திங்கட்கிழமை 05.04.2021 கதிர் 151

**இது ரகசியம் அல்ல!**

இது யாழ்.மாவட்டத்தில் தீவக வலயத்தில் நடைபெற்ற சம்பவம். ஒரு பாடசாலையில் பணி புரியாத ஆசிரியருக்கு அந்தப் பாடசாலை மூலம் மாதாந்த வேதனம் வழங்கப்படுகின்றது. அதையொட்டி எழுந்த கேள்வி – பதில் இது. அந்தக் கேள்வி – பதில் பக்கம்02 »

# யாழில் அதிபர், ஆசிரியர் உட்பட மேலும் 12 பேருக்கு கொரோனா

## வடக்கில் நேற்று 15 பேர் தொற்றுடன் அடையாளம்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 05

யாழ்ப்பாணத்தில் மேலும் 12 பேருக்கும், முல்லைத்தீவில் இருவருக்கும் வவுனியாவில் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இவர்களில் இருவர் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பாடசாலை ஒன்றின் அதிபரும் ஆசிரியரும் அடங்குகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பனவற்றில் நேற்று 668 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே வடக்கில் 15 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது. இவர்களில் 12 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர்.

## ஆயர் ஜோசப் ஆண்டகைக்கு இறுதி அஞ்சலி செலுத்த

# தமிழர் தாயகத்தில் இன்று துக்க தினம்

### திருவுடல் மாலை அடக்கம்



மறைந்த மன்னார் மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் அருட்திரு இராயப்பு ஜோசப்புக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கில் இன்று தமிழ்த் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது. ☞2

## 4 ஆயிரம் கோடி பணம் எங்கே?

### அரசிடம் சஜித் கேள்வி



இந்த ஆண்டு மார்ச் மாதத்தில் மட்டும் 4 ஆயிரத்து கோடி ரூபாவை அரசு ☞11

## மிருசுவிலில் 40 ஏக்கர் காணி சுவீகரிப்பு முயற்சி

### தடுத்து நிறுத்த அழைப்பு

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்தும் தனியாருக்குச் சொந்தமான காணிகளை அரச படைகளுக்குக் கையகப்படுத்தும் முயற்சிகள் இடம்பெற்றுவரும் நிலையில் இன்றும் தனியார் ☞11

## இராமநாதன் கல்லூரி மூடல்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்.மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி இன்று முதல் தற்காலிகமாக மூடப்படுகின்றது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார். ☞2

### மணல் கடத்தலைத் தடுத்த

## பொலிஸ் அதிகாரி டிப்பர் மோதி காயம்

வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலில் ஈடுபட்டோரைத் தடுக்க முற்பட்ட பொலிஸ் அதிகாரி டிப்பர் வாகனம் மோதி படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி, வல்லிபுக்குறுச்சியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது. (விவரமான செய்தி 4ஆம் பக்கத்தில்...)

## 69 இலட்சம் மக்களின் ஆணைக்கு எதிராக அரசு

### கம்மன்பில சீற்றம்



இலங்கையில் 69 இலட்சம் மக்கள் வழங்கிய ஆணைக்கு எதிராக அரசு செல்கின்றது என்று தெரிவித்த அமைச்சர் ☞2

## இரண்டாம் தவணை ஆரம்பிக்கும்போதே யாழ்.வலயப் பாடசாலைகள் மீளத் திறப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

இரண்டாம் தவணை ஆரம்பிக்கும் போதே யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் மீளத்திறக்கப்படும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்தார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு மேலும் ஒரு வாரம் விசேட விடுமுறை வழங்கப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மாநகரில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கடந்த 29ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் கல்விவலயப் பாடசாலைகளுக்கு ஒரு வாரம் விசேட விடுமுறை வழங்கப்பட்டது.

எனினும், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் ☞2

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் ஊடகங்களுக்கு இனி அனுமதியில்லை

### வெளிவந்தது அரசின் சுற்றுநிருபம்

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களின் போது, செய்தி சேகரிப்பதற்காக ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்காதிருக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளரான ஜெனரல் கமல் குணரத்னவால் இது தொடர்பான சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டங்கள் தொடர்பான செய்திகளை அறிக்கையிட வேண்டுமாயின், ஊடகவியலாளர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அல்லது பிரதேச ☞2

## ஐ.நாவின் தீர்மானத்தை நிராகரிக்கவே முடியாது!

### கோட்டாவுக்கு சம்பந்தன் பதிலடி



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46/1 தீர்மானத்தை இலங்கை அரசுஅரசியல் தேவைக்காகவே எதிர்ப்பதாகக் கூறி எதிர்வாதம் செய்து கொண்டிருக்கின்றது. ☞2

## ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளி மைத்திரிக்கு எதிராக தாமதமின்றி நடவடிக்கை எடுங்கள்

### அரசிடம் பேராயர் வலியுறுத்து

உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் குற்றவாளி எனக் கூறப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது உடனடியாகச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

– இவ்வாறு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார் பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்த ஜனாதிபதி அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை விரைவில் செயற்படுத்த ☞2



தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விடயத்தை நோக்குவதற்கு முன்னர் வடிவேல் காமொடி ஒன்றின் கேள்வி – பதிலை நோக்குவது பொருத்தமானது.

'போக்கிரி' படத்தில் 'சங்கி மங்கி'யாக வேடம் ஏற்றிருப்பார் வடிவேல். திடீரென 'யூரின் டாங்க்' முட்டிவிடும். வேறு வழியின்றி ஆளரவம் இல்லாத நேரத்தில் வீதியோரம் ஒதுங்க முயல்வார்.

*"அம்மா... ஆ... ஆ... அடக்க முடியல்லையே... அடக்க முடியல்லையே...!"* என்று முனகிக் கொண்டு வீதியோரம் கழிக்க முயற்சிப்பார் அவர்.

அந்த நேரம் பார்த்து 'பெல்' அடித்துக் கொண்டு சைக்கிளில் ஒருவர் வருவார். அதைப் பார்த்து வடிவேல் பொருமுவார்.

*'அதுக்குள்ள யாரு...? அதுக்குள்ள யாரு...?'* – என்று தனக்குத் தானே கேட்பார்.

*"ஆளே... இல்லே... அதுக்குள்ள பெல்லு?"* என்று குரல் எடுத்துச் சீறுவார்.

*"அதுதான் நீ இருக்கிறாய்... இல்லே?"* – என்று சைக்கிளில் வந்தவர் பதில் கூறியபடி செல்வார்.

*"நான் ஓரமாய்த்தான் இருக்கிறேன்.... கொங்காங்கோ... திமிரு...!"* – என்று திட்டுவார் வடிவேல்.

அந்த நிலைமைதான் இந்தப் பாடசாலைக்கும்.

பணிக்கு வராத பாடசாலை ஆசிரியருக்கு சம்பளம் அந்தப் பாடசாலையில். அதைப் பார்த்து வடிவேல் *'ஆளே... இல்லை. அதற்குள்ள எதுக்கு பெல்லு...?'* என்று கேட்ட மாதிரி பாடசாலை நிர்வாகம் கேட்டது.

*"ஆளே... பாடசாலையில் இல்லை. இங்கு ஏன் சம்பளம்...?"*

வடிவேல் கொமடியில் *"அதுதான் நீ இருக்கிறாயே...?"* – என்று பதில் வந்த மாதிரி கல்விப் பகுதியில் இருந்து நிர்வாகத்துக்குப் பதில் வந்தது.

*"அதுதான் அவர் கோட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றாரே...!"* – என்று.

சரி, இப்படிப் பதில் வந்ததற்குக் காரணம் என்ன என்று தேடிப் பார்த்தோம். அதிர்ச்சித் தகவல் காத்திருந்தது.

இந்த ஆசிரியர் கிளிநொச்சி மாவட்டத்தில் பணியில் இருந்தார். ஏற்கனவே பெரிய வீடு இருக்க, சின்ன வீடு 'செட்' பண்ணி வைத்திருந்தார் அவர். சின்ன வீட்டுக்கும் சுத்தி விட்டு, மூன்றாம் வீட்டுக்கு அவர் தயாரான போது சின்ன வீடு சிம்ம சொப்பனமாய்க் கிளர்ந்து, கையும் மெய்யுமாக மடக்கிப் பிடித்து, பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.

இதனையடுத்து கல்வி அமைச்சு இந்த ஆசிரியரை பணியில் இருந்து இடைநிறுத்தியது. இடை நிறுத்தப்பட்ட சமயம் ஒரு விசாரணை இடம்பெற்றது.

சில வாக்குறுதிகள் வழங்கப்பட்டமையை அடுத்து நெடுந்தீவில் உள்ள ஒரு மகளிர் கல்லூரிக்கு ஆசிரியர் இணைக்கப்பட்டார். ஆனால் ஆசிரியர் பற்றி முற்கூட்டியே அறிந்த பெற்றோர் அவர் வருகைக்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். அதனால் நெடுந்தீவில் பணிபுரிய அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டார்.

இவ்வாறு நெடுந்தீவில் இருந்து திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட ஆசிரியர் தீவக வலயத்தில் ஒரு கோட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளார். ஆனால் அவரின் மார்ச் மாத சம்பளப் பணம் அந்த நெடுந்தீவுப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டது. அதைப் பார்த்ததும், வடிவேல் பாணியில் *"அதுதான் ஆளே இல்லையே, பிறகு ஏன் சம்பளம்...?"* – என்று பாடசாலை நிர்வாகம் கேட்டது.

சைக்கிளில் வந்தவர் வடிவேலுவைப் பார்த்து *"அதுதான் நீ இருக்கிறாயே...?"* என்று பதில் அளிப்பது போல *"அதுதான் ஆசிரியர் கோட்டத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றாரே...!"* – என்று கல்வி நிர்வாகத்திடமிருந்து பதில் வந்திருக்கின்றது.

நல்ல ஆசிரியர், நல்ல கல்வி நிர்வாகம்....போங்கள்...!

★ ★ ★

சந்திரமுகி படத்தில் வடிவேலு *"மாப்பூ... வைச்சானே ஆப்பூ...!"* என்று கூறுவது போல விமல் அணி ஆட்சித் தரப்புக்கு – குறிப்பாக பஸில் பக்கத்துக்கு – ஓர் ஆப்பு வைத்திருக்கின்றது.

இன்னும் இருபத்தியைந்து நாள்களில் மே தினம். ஆளும் பொதுஜன பெரமுனக் கூட்டணியில் பிரதான கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுனவை விட்டு விட்டு, ஏனைய 11 கட்சிகளும் ஒன்று சேர்ந்து, தனித்து மே தினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் நடக்கின்றனவாம்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, சு.க. செயலாளர் தயாசிறி ஜயசேகரா, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியூ குணசேகரா போன்ற எல்லோரும் சேர்ந்து தனி வழி செல்வதற்கான சமிக்ஞையை இப்படிக் காட்டி, ஆளும் தரப்பின் மூத்த தலைவர்கள் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கின்றார்கள்.

ஆளும் தரப்புக்கு கொடுத்த இந்தப் பேதி மருந்து நன்றாகத்தான் வேலை செய் யத் தொடங்கியிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தக் குளிசையை அடுத்து கூட்டுக் கட்சிகளின் தலைவர்களை அழைத்துப் பேசி தாஜா பண்ணும் வேலையை அதி உத்தமர் அவசர அவசரமாக ஆரம்பத்திருக்கின்றார் என்று தகவல்.

கூட்டுக்குள் புகைச்சல் தீவிரமடைந்து விட்டது என்பது மட்டும் உண்மை.

– மின்னல் –

## ஐ.நாவின் தீர்மான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால், இலங்கை அரசால் அந்தத் தீர்மானத்தை நிராகரிக்கவே முடியாது. காலப்போக்கில் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய சூழல் ஏற்படும்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜெனிவா அழுத்தங்களுக்கு அச்சமின்றி முகங்கொடுப்பதோடு அதற்கு அடிபணியாமல் இருக்க முடியும் எனவும், இலங்கை ஒரு சுதந்திர நாடு என்ற வகையில் இந்தியப் பெருங்கடலில் நடக்கும் அதிகாரப் போட்டிகளுக்கு நாங்கள் இரையாக மாட்டோம் எனவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சில நாள்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான நிலையில் இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று நம்பிக்கை கொண்டிருக்கின்றீர்களா? எனக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

'ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதுபோன்று தீர்மானங்கள் முன்னரும் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவை அனைத்தையுமே நிராகரிக்க முடியாது.

அவ்வாறு நிராகரிப்பதாகக் கூறுவதானது, சர்வதேச தீர்மானங்களை மீறுவதாக அமையும். அதுமட்டுமன்றி சர்வதேசத்துடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தங்களையும் மீறுவதாகவே அமையும். இது நாட்டின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

இலங்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் இன ரீதியான மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்.

முன்னதாக ஐ.நா. செயலாளர் நாயகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினரின் அறிக்கையில் இந்தச் சம்பவங்கள் விடயங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதேபோன்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையிலும் அவ்விதமான சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆகவே, அந்தக் குற்றச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டியுள்ளன. இது மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கை அரசு அவ்விதமான விசாரணைகளை முன்னெடுத்திருக்கவில்லை.

எனவே, அவை தொடர்பான விசாரணைகள் முறையாக முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. அக்கருமம் காலப்போக்கில் நிச்சயமாக இடம்பெறும் – என்றார்.

## ஈஸ்டர் தாக்குதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேண்டும் என்றும் பேராயர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து தேவாலயங்களிலும் நேற்று உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. இந்தநிலையில், பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் கொழும்பு – கொட்டாஞ்சேனை சென். லூசியா தேவாலயத்தில் சிறப்பு ஆராதனை இடம்பெற்றது.

இங்கு ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த பேராயர்,

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவில் செயல்படுத்துமாறு நான் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற இந்தத் தற்கொலை தாக்குதல்களில் உயிரிழந்தவர்களை இன்று நினைவு கூருகின்றோம்.

குறித்த தாக்குதல் தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட வேண்டும்.

உண்மையில் நாங்கள் வெட்கப்படுகிறோம். முன்னாள் ஜனாதிபதி எதிர்வரும் தேர்தலில் களமிறங்கப் போவதாக ஒரு வதந்தி உள்ளது. கடமைகளை மறந்து வெளிநாடு சென்ற ஒரு ஜனாதிபதி எப்படி மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியும்? அவர் இன்னமும் எப்படி ஒரு கட்சித் தலைவராக இருக்க முடியும்?

அதேபோல, ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றவாளியாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளார். எனவே அவருக்கு எதிராக மேற்கொள்ள வேண்டிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கு மேலும் தாமதிக்க வேண்டிய அவசியம் இல்லை.

அத்துடன், இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய அமைச்சர்கள் மற்றும் ஏனைய சிலர் தற்போது சுதந்திரமாக நடமாடுகின்றனர். இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

எனவே, நடுநிலையாக தாக்குதலுடன் தொடர்புடைய அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

## இரண்டாம் தவணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணிப்பாளரின் ஆலோசனைக்கு அமைய விசேட விடுமுறை இன்று தொடக்கம் மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்படுகின்றது.

இதன்மூலம் யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகள் எதிர்வரும் ஏப்ரல் 19ஆம் திகதி இரண்டாம் தவணை ஆரம்பத்திலேயே திறக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஒருங்கிணைப்புக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் முடிவடைந்த பின்னர், அந்தக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடன் தனியாகக் கலந்துரையாடித் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று குறித்த சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களை நடத்துவது தொடர்பான ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தச் சுற்றுநிருபம் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் 'ஊடகங்களுக்கு விடயங்களை அறிக்கையிடல்' என்ற தலைப்பின் கீழ் குறித்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## 69 இலட்சம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உதய கம்மன்பில, அரசுக்குள் நாங்கள் ஒரு போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என்பது உண்மைதான் எனவும் ஒப்புக் கொண்டார்.

கொழும்பில் நேற்று நிகழ்வொன்றில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசுக்குள் ஒரு உள் பிளவு இருக்கின்றதா என்று சிலர் எங்களிடம் கேட்கின்றார்கள். நாங்கள் அரசுக்குள் ஒரு போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம் என்பது உண்மைதான். ஆனால், அந்தப் போராட்டம் அரசை அழிப்பதற்கான போராட்டம் அல்ல. மாறாக மக்கள் அளித்த ஆணை மற்றும் அவர்கள் எங்கள் மீது வைத்திருக்கும் நம்பிக்கையை காப்பாற்றுவதற்கான போராட்டத்தையே நாங்கள் ஆரம்பித்திருக்கின்றோம்.

மக்களின் ஆணையை நாங்கள் மதிப்பது என்றால் எங்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களின் ஆணையை மதிக்கவேண்டும்.

பெறப்பட்ட ஆணையை நாங்கள் பாதுகாக்கின்றோம் என்றால், அரசமைப்பின் 20ஆவது திருத்தம் அது வந்த வழியில் வந்திருக்காது. நாங்கள் ஆணையைப் பாதுகாக்கின்றோம் என்றால், கிழக்கு கொள்கலன் முனையத்தை இந்தியாவுக்குக் கொடுக்கும் எண்ணம்கூட இந்த அரசின் தலைவர்களின் மனதில் வந்திருக்காது. அவர்கள் ஆணையைப் பாதுகாக்கின்றார்களானால், நமது அரசியல் தலைவர்கள் சட்டம், ஒழுங்கைத் துன்புறுத்தும் முடிவுகளை எடுக்க மாட்டார்கள்.

இந்த அரசை ஆட்சிக்குக் கொண்டுவர பணியாற்றிய முன்னோடிகள் என்ற வகையில், அவர்களுக்கு வாக்களித்த 69 இலட்சம் மக்களின் விருப்பத்துக்கு எதிராகச் செல்லும் அரசின் தவறுகளைச் சரி செய்வது எமது கடமை – என்றார்.

## தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இராயப்பு ஜோசப் ஆண்டகை, தமிழினத்தின் மீதான இனப்படுகொலையை, இறுதிப் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களின் எண்ணிக்கையை பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலும் பொது வெளியிலும் சர்வதேசத்திலும் அறுதியிட்டு தெரிவித்தவர்.

பாதிக்கப்பட்ட தமிழினத்தின் நீதிக் குரலாக, சாட்சியாக இருந்த மிகப்பெரும் ஆளுமையை தமிழ்த் தேசியம் இன்று இழந்து நிற்கின்றது.

இந்தநிலையில், ஆண்டகையின் மறைவையொட்டி அவரால் தமிழ்த் தேசியத்துக்கு ஆற்றிய சேவைகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக இறுதி வணக்க நிகழ்வு நடைபெறும் இன்று வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தேசம் எங்கும் தமிழ்த் தேசிய துக்க தினமாகவும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது என வடக்கு – கிழக்கு தமிழ் சிவில் சமூகம் அறிவித்திருந்தது.

இன்றைய நாளில் தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசம் எங்கும் வாழும் தமிழ் மக்களும் கறுப்புப்பட்டி அணிந்து தங்கள் துக்கத்தை வெளிப்படுத்துமாறும் வடக்கு – கிழக்கு தமிழ் சிவில் சமூகம் கேட்டுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

ஆயரின் திருவுடலுக்கு அரச அதிகாரிகள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட நாட்டின் பல இடங்களிலிருந்தும் பொதுமக்களும் இணைந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நேற்று மாலை 3 மணியளவில் ஆயரின் திருவுடல் மன்னார் ஆயர் இல்லத்தில் இருந்து பவனியாக மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. திருவுடல் இன்று மதியம் 2 மணி வரை பேராலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

மாலை 3 மணியளவில் பேராலயத்தில் இறுதி திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இலங்கையின் அனைத்து ஆயர்களும் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள்.

அதனைத் தொடர்ந்து ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடல் பேராலயத்தில் அடக்கம் செய்யப்படவுள்ளது.

## இராமநாதன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட மருதானர்மடம் இராமநாதன் கல்லூரியின் அதிபர், ஆசிரியர் ஆகியோர் நேற்று கொரோனா வைரஸ் தொற்றுடன் கண்டறியப்பட்டதையடுத்து சுகாதாரத் திணைக்களத்தின் அறிவுறுத்தலுக்கமைய இந்த முடிவு எடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி எதிர்வரும் 19ஆம் திகதி இரண்டாம் தவணை ஆரம்பித்திலேயே மீளத்திறக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தந்தையே!
ஆயன் இல்லாத மந்தைகளாக
நாம் தனித்து விட்டாலும்
நீங்கள் ஏற்றி வைத்த கலைத் தீபத்தை
அணையவிடாது கொண்டு செல்வோம்
அமைதியாக இளைப்பாறுங்கள்
கண்ணீருடன் விடைதருகின்றோம்
விண்ணிலிருந்து வழிகாட்டுங்கள்.





## 'கலைத்தூது' அருட்கலாநிதி
## நீ. மரிய சேவியர் அடிகள்

(ஸ்தாபகர், இயக்குநர் - திருமறைக் கலாமன்றம்)

மலர்வு: 03.12.1939 உதிர்வு: 01.04.2021

கடந்த 55 ஆண்டுகளுக்கு மேலாக கலை இலக்கியத்துறையில்
தன் வாழ்நாளை முழுமையாக அர்ப்பணித்து அமரத்துவம் அடைந்த
எமது இயக்குநர் தந்தையின் புகழுடல் இன்று காலை 10.00 மணி முதல்
யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும்.
இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை
6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு
யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் ஆரம்பமாகும்.
தொடர்ந்து 9.30 மணிக்கு யாழ். மறைமாவட்ட ஆயர்
மேதகு யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை
தலைமையில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
அதன் பின்னர் தந்தையின் புகழுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா
சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இத்தகவல்களை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

**திருமறைக் கலாமன்றம்**
238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# ஏன் இந்தச் சீற்றம்?

மாட்டையோ, கன்றையோ முனைக் குச்சியில் கட்டிப் போடுவதற்காக அதன் கழுத்தில் கட்டப்பட்டிருக்கும் – நீளம் அதிகம் இல்லாத – கயிற்றுக்குத் 'தும்பு' என்று பெயருண்டு. மாட்டைக் கட்டிப் போட வேண்டுமென்றால் தும்பைத்தான் பலமாகக் பிடிக்க வேண்டுமே தவிர, மாட்டின் வாலை அல்ல. வாலைப் பிடித்தால் என்னவாகும்? மாடு மிரண்டு ஒடு விடும். காரியம் கெட்டு விடும். இதனைத்தான் 'தும்பை விட்டு விட்டு வாலைப் பிடித்தல்' என்பார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயத்தில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் இப்போது வெளியிட்டிருக்கும் கருத்துக் கூட தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கும் முயற்சி போலவே தோன்றுகின்றது.

*"உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் குற்றவாளி எனக் கூறப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்."* – என்று சீறியிருக்கின்றார் பேராயர்.

அந்தக் கொடூரத் தொடர் தாக்குதல்களில் அதிகம் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களின் தலைவர் என்ற முறையில் கர்த்தினாலின் ஆதங்கம், அதிருப்தி, மன உளைச்சல் எல்லாம் புரிந்து கொள்ளத் தக்கவையே.

ஆயினும், பாவம் செய்தவர்களை – தனக்குப் பொல்லாப்பு புரிந்தவர்களை – ஏன் தன்னை சிலுவையில் அறைந்தவர்களையே – மன்னிக்கிறேன் என அறிவித்து, உலகுக்கு மன்னிப்புக்கு புதிய அர்த்தம் கற்பித்த – இயேசு பிரானின் பாதையைப் பின்பற்றி மக்களை வழிகாட்டுபவர் எனக் கூறப்படும் இலங்கைப் பேராயர், 'தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கின்றாரோ' என்று எண்ணத் தோன்றுகின்றது.

இந்தத் தொடர் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதோ, அவரது ஆட்சிப் பீடம் மீதோ வீழும் குற்றச்சாட்டுக்களை மறைத்து, அத்தரப்பைக் காபந்து பண்ணி, பாதுகாப்பது எமது எண்ணம் அல்ல. அதற்குத் தேவை ஏதும் இல்லையும் கூட.

ஆனால் இந்தத் தொடர் தாக்குதல் சம்பவங்களின் பிரதான சூத்திரதாரிகள் அல்லர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவோ அல்லது அவரது ஆட்சித் தரப்பினரோ.

அத்தாக்குதல் தொடர்பான முன்னெச்சரிக்கைகள் கிடைத்தும் அதைத் தடுக்கத் தவறிய – பதவிப் பொறுப்பை சரியாக நிறைவேற்றத் தவறிய – குற்றத்தையே அவர்கள் இழைத்தவர்கள்.

அந்தக் குற்றத்தை இழைத்தோர் மீது இவ்வளவு சீற்றம் கொள்ளும் பேராயர், உண்மைச் சூத்திரதாரிகள் இன்னும் சட்டத்தின் முன் கொண்டு வரப்பட்டாமை குறித்து அதிகம் சீற்றம் வெளிப்படுத்தவில்லை என்பது நோக்கற்பட வேண்டும்.

உண்மைச் சூத்திரதாரிகள் இன்னமும் அம்பலப்படுதப்படாத பின்புலத்தில் இன்னொரு விடயமும் நோக்கப்பட வேண்டும்.

இத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய நாடாளுமன்றத் தெரிவுக்குழு அந்த விடயத்தைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தது.

அது – இந்தத் தொடர் தாக்குதலின் விளைவாகப் பெரும் அரசியல் நன்மை அடைந்த தரப்பு யாது, அதற்கும் இந்தத் தொடர் தாக்குதல்களுக்கும் உள்ள தொடர்புகள், சாதக, பாதகங்கள், பின்னணிகள், அத்தகைய தரப்புகளுக்கு இத்தகைய ஒளிவு, மறைவு ஒப்பரேஷன்களில் இருக்கக் கூடிய இயலுமைகள் போன்றவை விரிவாக ஆராயப்பட வேண்டும் என்பதாகும்.

இந்தக் கோணத்தில் இன்னும் புலனாய்வுத்துறை இறங்கவேயில்லை என்பதும், முடிச்சுகள் அவிழ்க்கப்படவில்லை என்பதும் நோக்கற்பட வேண்டும்.

இன்றைய நிலையில் இந்த விவகாரத்தில் மூன்று தரப்புகள் தொடர்புபடக் கூடும்.

ஒன்று – குண்டுத் தாக்குதல்களைத் திட்டமிட்டு, முன்னின்று நடத்திய பிரதான சூத்திரதாரிகள்.

இரண்டாவது – இந்தத் தொடர் தாக்குதல்கள் மூலம் இலங்கையில் அரசியல் ரீதியாக வலுவான ஆதாயம் அடைந்தவர்கள்.

மூன்றாவது – இந்தத் தாக்குதல் பற்றி முற்கூட்டியே கிடைத்த எச்சரிக்கைத் தகவல்களை அசிரத்தையுடன் – பொறுப்பின்றி – கையாண்டதன் மூலம் தாக்குதல் இடம்பெற வாய்ப்பளித்த குற்றத்தை இழைத்தவர்கள்.


முதல் இரண்டு தரப்பினரையும் விட்டு விட்டு மூன்றாவது தரப்பு மீது பாய்கின்றார் பேராயர். இத் தாக்குதல் தொடர்பில் யாருமே தண்டிக்கப்படவில்லை என்ற ஆற்றாண்மையினாலோ அல்லது தமது மக்கள் இப்படி அநியாயமாகச் சாவதைத் தடுப்பதற்குக் கிடைத்த வாய்ப்பைத் தமது அசிரத்தையால் கோட்டை விட்டு விட்டார்கள் என்ற எரிச்சலிலோ இந்தச் சீற்றம் பேராயருக்கு வந்திருக்கலாம்.

ஆனால் அது தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்கும் வேலை போன்றே தெரிகின்றது.

இன்னொரு விடயம். ஆணைக்குழுக்கள், நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள் ஜனாதிபதிக்கு வழங்குபவை பரிந்துரைகளே. வழக்குத் தொடுப்பதாயின், ஆதாரங்களின் அடிப்படையில் சட்டமா அதிபரே அதைத் தீர்மானிக்க வேண்டும். சட்டமா அதிபரை வழிப்படுத்தும் வல்லமை ஆணைக்குழு பரிந்துரைக்குக் கிடையாது என்பதும் நோக்கப்பட வேண்டும்.

# அறிவுரைகளை அரசு கேட்கத் தவறினால் அதற்கும் தீர்வுகள் எம்மிடத்தில் உள்ளன

## எல்லே குணவன்ச தேரர் எச்சரிக்கை



அரசாங்கம் அறிவுரைகளை கேட்கத் தவறினால் அதற்கும் தீர்வுகள் எம்மிடத்தில் உள்ளன என எல்லே குணவன்ச தேரர் தெரிவித்துள்ளார். இனம் என்ற ரீதியில் நாம் நிர்க்கதியாகியுள்ளோம் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலான பரிந்துரைகளை முன்வைத்து ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

உப்பு நீரில் உருவாகின்றது, உப்பு கரைவதும் நீரில்தான் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த மண் பற்றி மட்டுமன்றி கடல், ஆகாயம், ஜீவராசிகள் உள்ளிட்ட அனைத்து விடயங்கள் பற்றியும் பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கங்கள் எம்முன் வாக்குறுதிகளை அளித்து அவற்றை நிறைவேற்றத் தவறினால் அதற்கு எவ்வாறு நடவடிக்கை எடுப்பது என்பது தொடர்பாகவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுஎனஅவர்சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அரசாங்கம் பௌத்த பிக்குகள் முன்னிலையில் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதாக அளித்த வாக்குறுதிகளில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என எல்லே குணவன்ச தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஓய்வு நிலை ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகைக்கு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நேற்று மன்னாரில் இறுதி அஞ்சலி செலுத்தியபோது.....



# தவறிழைக்கும் பொலிஸார் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்க!

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தல்

தவறிழைக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தவறுவது, பொலிஸ் திணைக்களத்தின் மீதான பொது மக்கள் நம்பிக்கையைப் பாழ்படுத்தும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற பொலிஸ் அதிகாரிகளின் மோசமான நடவடிக்கைகள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில் –

எந்தவொரு சூழ்நிலையிலும் சட்ட வரையறைகளை மீறி, பொலிஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தக்கூடாது.

பொலிஸ் அதிகாரிகளின் வன்முறை நடவடிக்கைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுத்து, பொலிஸ் திணைக்களம் மீதான நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்.

பொலிஸாரின் நடவடிக்கைகள் தொடர்பில் தாம் தொடர்ந்தும் கண்காணிப்பாக இருப்பதாகவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# மணல் கடத்தலை தடுக்க சென்ற பொலிஸார்மீது வாகனத்தை மோதித் தள்ளிய கடத்தல்காரர்கள்!

வடமராட்சி கிழக்கில் மணல் கடத்தலில் ஈடுபட்டோரைத் தடுக்க முற்பட்ட பொலிஸ் அதிகாரி மீது டிப்பர் வாகனத்தால் மோதித் தள்ளி விட்டு கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது படுகாயமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வடமராட்சி வல்லிபுர குறிச்சி பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

வடமராட்சி கிழக்கிலிருந்து சட்டத்துக்குப் புறம்பமாக மணல் அகழ்வில் ஈடுபட்டோர் டிப்பர் வாகனத்தில் மணலை ஏற்றிப் பயணிக்கின்றனர் எள உள்ளூர் மக்களால் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது.

அதனை அறிந்து பருத்தித்துறை பொலிஸ் நிலைய முறைப்பாட்டுப் பிரிவு பொறுப்பதிகாரி, உப பொலிஸ் பரிசோதகர் அஜித் தலைமையில் 6 பேர் கொண்ட பொலிஸ் பிரிவு சம்பவ இடத்துக்குச் சென்றிருந்தனர்.

அவ்வேளை வல்லிபுர குறிச்சிப் பகுதியில் மணல் ஏற்றியவாறு டிப்பர் வாகனம் வருவதைக் கண்ட பொலிஸார் அதனை மறிக்க முற்பட்டுள்ளனர். எனினும் டிப்பர் வாகனம் உப பொலிஸ் பரிசோதகரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த உப பொலிஸ் பரிசோதகர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பருத்தித்துறை பொலிஸார், தப்பித்த சாரதியைத் தேடிவருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராயப்பு ஜோசப்புடன் ஓர் அனுபவப் பகிர்வு அவரது கல்லூரிக்கால சக நண்பர் எழுதுகிறார்

**இந்தக் கட்டுரையை எழுதியவரின் தந்தையார் கலைத்தவசி குழந்தை செபமாலை. அவ்வப்போது மறைந்த ஆயர் இராயப்பு ஜோசப் தொடர்பில் கூறிய எண்ணங்களை குறித்து வைத்து அவற்றை முழுமைப்படுத்தி இந்தக் கட்டுரையை எழுதியுள்ளார்.**

மிகுந்த மதிப்பிற்கும் பாராட்டுக்கும் உரியவர் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் செய்த சேவைகளைப் பாராட்டி அவருடைய 75 ஆவது அகவையின் நிறைவிலும் 25 ஆவது ஆயத்துவ பணியிலும் பாராட்டுப் பத்திரம் கொடுக்க வேண்டும், வாழ்த்துப்பா இசைக்க வேண்டும் என என் மனம் எவ்வளவோ விரும்புகிறது.

ஆனால், என் தற்போதைய நிலையில் நினைத்தபடி போய்வரவோ, எழுதவோ, பாடவோ என்னால் முன்பு போல முடியாதுள்ளது. இவற்றில் ஈடுபடவேண்டும் என மனம் விரும்புகிறது, ஆனால், உடல்நிலை அத்தகைய ஒன்றுக்கு ஆயத்தமாக இல்லை என்பது எனக்குத் தெரிகிறது.

பலவீனமான இந்நிலையிலும், இச்சிறு ஆக்கத்தைக்கூட என் குருமகனின் உதவியோடுதான் எழுதுகிறேன். என் சொற்களுக்கும், என் அரைகுறை எண்ணங்களுக்கும், என் உணர்வுகளுக்கும் அவரே முழுமையான வடிவம் கொடுக்கிறார்.

ஆயரோடு உண்டான அனுபவங்களில் சிலவற்றையேனும் பதிவுசெய்யவேண்டும் என்ற ஆசையினாலும், ஆயர் அவர்கள் செய்த பணிகளுக்கு எல்லாம் மனமார்ந்த என் நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் இச்சிறு கட்டுரை அமைகிறது.

**இருவரும் ஒன்றாய் ஒரே வகுப்பில்!**

ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களும் நானும் சமகாலத்தவர்கள். 1940 ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 08 இல் நான் பிறந்தேன், அதே ஆண்டு ஆயர் சித்திரைத் திங்கள் 16 இல் பிறந்தவர்.

நான் முருங்கன் பாடசாலையில் பயிலுகின்றபோது ஆயர் அவர்களும் சில ஆண்டுகள் எங்கள் பாடசாலையில் சிறுவனாய்ப் படித்தார்.

இருவரும் ஒரே வகுப்பில் சிறுவயதில் கற்ற இனிய நினைவுகள் இன்னும் இனிமையாகத்தான் மனதில் வந்து செல்கின்றன.

ஆயர் அவர்களுடன் சிறுவயது பாடசாலை நாள்களை எண்ணிப் பார்க்கின்றபோது அவரின் அமைதியான போக்கும், அடக்கமான பேச்சும், ஆழமான செயற்திறனும், இறைவனுக்கும் இறைமக்களுக்கும் சேவையாற்ற வேண்டும் என்ற அவருடைய மனப்பாங்கும் எப்போதுமே அவரில் இருந்துவந்தது என்பதை அவரை அறியத் தொடங்கிய காலம் முதலே அவதானித்திருக்கிறேன்.

ஆசிரியர், பெரியோர் மட்டில் நன்றியுணர்வு கொண்டவர். அன்று எங்கள் முன்னேற்றத்துக்கு உழைத்தவர்களுள் முக்கியமான ஓர் ஆசிரியர் யாழ்ப்பாணம் கோவில் வீதி இல.02 இல் வசித்துவந்த ஆசிரியர் றோகேசன் ஜோசவ் என்பவர் ஆவார்.

ஆயர் அவர்களுடைய வாழ்விலும் என்னுடைய வாழ்விலும் ஆசிரியர் றோகேசன் ஜோசவ் அவர்களின் பங்களிப்பு மிகப் பெரிது.

இவ்வாசிரியரே எங்கள் வாழ்வின் உயர்வுக்கு வித்திட்டவர் என்பதை இன்றும் நன்றியோடு எண்ணிப் பார்க்கிறேன்.

றோகேசன் ஆசிரியருடைய இறுதிக்காலம் வரை ஆயர் அவர்கள் எத்தகைய ஓர் அன்பான ஆசிரிய - மாணவ உறவை அவருடன் பேணிவந்தார் என்பதை நீண்ட காலமாகவே அறிந்திருக்கிறேன்.

இவ்வாறு தனக்குக் கற்றுக் கொடுத்த ஆசிரியர்களோடும், தன்னை ஆளாக்கிய பெரியவர்களோடும் பெருமதிப்புடனும் நன்றிப்பெருக்குடனும் பழகிக்கொள்வார்.

ஆயராகத் திருப்பொழிவு பெற்றபின்னரும்கூட தன்னை உருவாக்கி உயர்த்திவிட்ட றோகேசன் ஆசிரியருடன் ஆயர் அவர்கள் கொண்டிருந்த உறவும் வைத்திருந்த அன்பும் அக்கறையும் மிக உயர்வானவை.

**மக்கள் பணியாளர்**

ஆயர் அவர்கள், குருத்துவ நிலைக்குத் தன்னை அர்ப்பணித்து, இளம் குருவாக எங்கள் பங்கான முருங்கன் பங்கில் பணியாற்றியபோது நானும் ஓர் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

அந்நேரத்தில் அருள்தந்தை சேவியர் குருஸ் பங்குத் தந்தையாகவும், ஆயர் இளம் உதவிப் பங்குத் தந்தையாகவும் முருங்கன் - உயிலங்குளம் பங்கில் பணியாற்றினார்கள்.

ஆயர், இளம் குருவாகப் பணியாற்றிய நாள்களில் ஏழைகள்பால் விசேட கரிசனையுடையவராக இருந்தமையை நான் அறிவேன்.

1970 களில் கடினமான சூழலில் மக்களுடனான அவரின் பணிகள் காத்திரமானவையாக இருந்தன. எவ்வாறெல்லாம் மக்களுக்குத் தனது சேவை கிடைக்க முடியுமோ அவ்வாறெல்லாம் தனது தொண்டுகளை வழங்க அவர் என்றுமே பின்னின்றவரல்லர்.

**மனம் திறந்து பாராட்டுகின்றவர்**

என்னுடைய கலைச் சேவைகளையும், மறைத் தொண்டையும், சமூகப் பணிகளையும், முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஊடாக நாங்கள் ஆற்றிய கலைப் பணிகளையும் எப்போதும் மனம் திறந்து பகிரங்கமாகப் பாராட்டுபவராக ஆயர் ஜோசப்பை பற்பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கிறேன்.

அதன் ஒரு வெளிப்பாடாகத்தான் மன்னார் மறை மாவட்டத்தின் சார்பாக 'திருக்கலை வேந்தன்' என்ற கௌரவப் பட்டத்தை எனக்களித்து ஆயர் என்னைக் கௌரவித்தார்.

ஆயருக்கு பல்வேறு மேய்ப்புப்பணி அலுவல்கள் இருப்பினும், முக்கியமான நிகழ்வுகளுக்கு அவரை அழைக்காமல் எங்கள் நிகழ்வுகள் இடம் பெறுவதில்லை.

அதேபோல நாங்கள் அழைக்கிறபோதெல்லாம் அது நூல் வெளியீடாக இருந்தாலென்ன, நாடக ஆற்றுகையாக இருந்தாலென்ன, ஏனைய கலைவிழாக்களாக இருந்தாலென்ன அவற்றில் பங்கேற்று எனக்கும் எம் மன்றத்தினருக்கும் உற்சாகம் அளித்துவந்தார்.

எங்கள் சமூகப்பணிகள், கலைப்பணிகள் மட்டில் ஆயர் அவர்கள் மிக உயர்வான மதிப்புக் கொண்டிருப்பவர்.

'குழந்தை மாஸ்டரும் நானும் ஒரே வகுப்பில் படித்தவர்கள். அவருடைய கலைப்பணிகளையும் திருச்சபைக்கு ஆற்றும் பணிகளையும் நான் நன்கு அறிவேன்.' - என்று ஆயர் அவர்கள் பல சந்தர்ப்பங்களில் பகிரங்கமாகக் குறிப்பிட்டமையையும் தம் தோழமை உணர்வை வெளிப்படுத்தியமையையும் மனமகிழ்வோடு நினைத்துப் பார்க்கிறேன்.

இப்பேர்ப்பட்ட நல்ல மனிதர்களுடைய ஆசீரும் பாராட்டும்தான் நாங்கள் இற்றைவரை 55 ஆண்டுகளுக்கு மேலாகத் தனியாகவும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் ஊடாகவும் கலைப்பணிகளையும் மறைப்பணிகளையும் சமூகப்பணிகளையும் ஆற்றி வருவதற்குத் தூண்டுதலாக இருந்து வந்திருக்கின்றன.

**பல நிகழ்வுகளில் பங்கேற்று ஊக்குவித்தவர்**

எடுத்துக்காட்டாக 'பரிசுபெற்ற நாடகங்கள்'(1997), 'மரபுவழி நாடகங்கள்'(1998), 'மாதோட்டம்' கவிதைத் தொகுதி (2000) போன்ற என்னுடைய நூல் வெளியீடுகளுக்கும், முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தால் என்னுடைய கலைப்பணிகளைப் பாராட்டி வெளியிடப்பட்ட கலைப்பணி நயப்பு மலரான 'கலைத்தவசி' என்ற நூல் வெளியீட்டுக்கும் (2012) பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தமையை எண்ணிப் பார்க்கிறேன்.

மேலும், எம் ஆலய நூற்றாண்டுவிழா மலரான 'புனித யாகப்பர் ஆலய நூற்றாண்டுவிழா மலர்' (2008) வெளியீட்டுக்கும், எம் ஆலய புனிதரின் பெயரிலான 'புனித சந்தியோகுமையோர்' நாடகத்துக்கும் (1995, 2009), அமரர் புலவர் ச.பாவிலு (சீனி) அவர்களால் எழுதப்பட்டு இரண்டாவது தடவையாக ஆற்றுகை செய்யப்பட்ட புனித சில்வேஸ்திரியார் வாசாப்பாவிற்கும் (2012) ஆயர் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்து எம்மை உற்சாகப்படுத்தியிருந்தார் என்பதை நன்றியுடன் நினைவுகூருகிறேன்.

முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் பொன்விழா நிகழ்வு மிகப்பெரிய அளவில் 2014 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 19 ஆம் நாள் நடைபெற்றபோது அந்நிகழ்வில் ஆயர் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து அந்நிகழ்வு முழுமையாக நிறைவடையும்வரை இருந்து சென்றமை எனக்கு நினைவிருக்கிறது.

**நிறைவாக...**

இவ்வாறு, ஆயர் அவர்கள், தம்முடைய பிரசன்னத்தாலும் வழிநடத்துதலினாலும் பல்வேறு வகையில் எமக்கு உறுதுணையாக இருந்து உற்சாகம் அளித்திருக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கையில் ஆயர் அவர்கள் எவ்வகையில் தன்னைச் சமூக வாழ்விலும், கலைப்பணிகளிலும் ஈடுபடுத்தியுள்ளார் என்பதை நினைத்து இறைவனுக்கும் ஆயர் அவர்களுக்கும் என் நன்றிகளைச் சமர்ப்பித்து நிற்கிறேன்.

ஆயர் அவர்கள் அமரத்துவம் அடைந்துவிட்டார். அவரின் ஆன்மா இறையமைதியில் இளைப்பாறுவதாக.

**செ.அன்புராசா அடிகள்**
**கலைத்தவசி குழந்தை செபமாலை**
**தலைவர், முருங்கன் முத்தமிழ் கலாமன்றம்**
**முருங்கன்.**



## ஆயர் இராயப்பு ஜோசப் இறுதியாக எழுதிய கடிதம்

ஆயர் இறுதியாக எழுதிய உத்தியோகபூர்வமான கடிதம் வட மாகாண முன்னாள் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எழுதிய கடிதமே என இராயப்பு ஜோசப் ஆண்டகையின் செயலாளராகக் கடமையாற்றிய அருட்தந்தை யூட்ஸ் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை தொடர்பில் பல தகவல்களை ஊடகமொன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியில் வைத்து பகிர்ந்திருந்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

ஏப்ரல் 16 ஆம் திகதி அவரது பிறந்த நாளுக்கு வருகை தந்த போது சி.வி.விக்னேஸ்வரன் ஆயரிடம் ஒரு வேண்டுகோளை விடுத்திருந்தார், நீங்கள் உங்களது 75 ஆவது அகவை முடிந்த பின்னரான காலப்பகுதியில் தமிழ் மக்களுக்கான முழுமையான பணியை எங்களுடன் சேர்ந்து ஆற்ற வேண்டும் என்று.

அதனடிப்படையிலேயே ஆயரும் அதனை ஏற்றுக் கொண்டு அந்த கடிதத்திலே, '75 ஆவது வயது நிறைவுறுகின்ற இந்தக் காலத்திலே என்னுடைய வாழ்வைத் தமிழ் மக்களுக்காக முழுமையாக அர்ப்பணிக்க இருக்கின்றேன். உங்களுடன் பயணிப்பேன்' - என்று குறிப்பிடப்பட்ட அந்தக் கடிதம் தான் கடைசியாக அவர் எழுதிய கடிதம் என குறிப்பிட்டுள்ளார்.

## தற்துணிவோடு இனத்துக்காக குரல் கொடுத்தவர் ஜோசப்

**கலாநிதி ஆறு.திருமுருகன் இரங்கல்**



**மிக இக்கட்டான காலகட்டங்களில் தற்துணிவோடு எம்மினத்துக்காகக் குரல்கொடுத்த ஆன்மீகப் பெரியவரை யாம் இழந்துவிட்டோம்.**

**- இவ்வாறு தனது இரங்கலுரையில் தெரிவித்துள்ளார் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவரும் அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உபதலைவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்.**

**அவரது செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -**

**மக்களின் அவலநிலைகளை உலகுக்குத் தயங்காது எடுத்துக்கூறியவர். போர்க்காலத்தில் அகதிகளின் கண்ணீரைத்துடைப்பதில் அக்கறைகாட்டியவர். ஏனைய மதத் தலைவர்களோடு மிகுந்த நட்போடு பழகியவர்.**

**பாரம்பரியமான மரபுகள் என்றும் பாதுகாக்கப்படவேண்டும் என்ற ஆவல் கொண்டவர். தமிழ் இலக்கிய விழாக்களை என்றும் ஊக்குவித்தவர். இந்தப் பெரியாரின் பிரிவுகுறித்து சைவத்தமிழ் மக்களின் சார்பில் எமது கவலையைத் தெரிவிப்பதோடு, அவர்காட்டிய நேச உணர்வை அனைவரும் பின்பற்ற வேண்டி, அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுவோம். - என்றுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# இனவிடுதலை வேண்டிநிற்கும் ஈழத்தமிழர் மனங்களில் ஆறாத்துயரை ஏற்படுத்திவிட்ட இராயப்புவின் மறைவு

## பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் அஞ்சலி

வணக்கத்துக்குரிய ஓய்வுநிலை மன்னார் மறைமாவட்ட ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்கள் இயற்கை எய்திய செய்தி இன விடுதலை வேண்டி நிற்கும் ஈழத் தமிழர்களின் மனங்களில் ஆறாத்துயரையும், இடைவெளியையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

இவ்வாறு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மக்கள் பேரெழுச்சி இயக்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கை வருமாறு –

கடந்த 01.04.2021 அன்றையநாள் ஈழத்தமிழினத்தின் நெஞ்சங்களில் இடியாய் இறங்கிய துயரநாள். எமது தாயகத்தில் சிங்கள இனவாத அட்டூழியங்களுக்கு எதிராகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் சிங்களமயமாக்கலுக்கெதிராகவும் இறுதி வரை அறப்போர் புரிந்து வந்த மாமனிதர் எங்கள் வணக்கத்துக்குரிய ஓய்வுநிலை மன்னார் மறைமாவட்ட ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்கள் இயற்கை எய்திய செய்தி இன விடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழர்களின் மனங்களில் ஆறாத்துயரையும், இடைவெளியையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

தமிழர் தாயக மண்ணில் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த போரின் போது ஆட்சியில் இருந்த சிறிலங்கா அரசும் அதனது அரச படையினரும் தமிழ் மக்களின் மீது மிகப்பெரும் பொருளாதாரத் தடையை விதித்திருந்தனர்.

1960 களில் பியாவ்ரா பிரதேசங்கள் மீது நைஜீரிய அரசு விதித்த பொருளாதாரத் தடையிலும் விட மோசமான பொருளாதாரத் தடைகளையும் மீன் பிடித் தடைகளையும் தமிழ் மக்கள் மீது சிங்கள இனவாத அரசு கட்டவிழ்த்திருந்தது.

இதனால் யுத்த கட்டுப்பாட்டு பிரதேசங்களில் உள்ள மக்களின் அன்றாட வாழ்வாதாரங்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த காலங்களில் அந்த மக்களின் அவலவாழ்வை வெளியுலகிற்குக்கொண்டு வந்து இறைபணியோடு, போர்ச்சூழல் வாழ்வையும் சமமாக மதித்து நின்று சிறிலங்கா அரசை நெஞ்சுறுதியோடு கேட்டு தமிழ் பேசும் பாதிக்கப்பட்ட சமூகத்திற்காய் போராடிய ஒரு புனிதருக்கு 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்' சிரம் தாழ்த்தி அகவணக்கம் செலுத்துகின்றது.

தமிழ் மக்கள் ஒரு தனித்துவமான அடையாளங்களுடன் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஓர் தேசிய இனம் என்பதன் அடிப்படையில் அவர்களுக்கான சுய நிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்தானவர்கள் எனும் தமிழ்த்தேசிய சித்தாந்தத்தில் எத்தகைய இடர்கள் வந்தபோதும் துணிந்து பயணித்த மகானை இன்று தமிழ்பேசும் நல் உலகம் இழந்து தவித்துக் கொண்டிருக்கிறது.

உலக வரலாற்றின் இயங்கு நியதிகளுக்கு உட்பட்டு ஒடுக்கு முறைகளை வலிந்து திணிக்கின்ற சிங்கள இனவாத அரச இயந்திரத்துக்கும், ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கும் இடையில் நின்று கொண்டு பாதிப்புற்ற தமிழ் மக்களையும் அவர்களது பாரம்பரிய தாயக நிலப்பரப்பையும் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு வந்த முற்போக்கான சிந்தனை கொண்ட மனிதவுரிமைகள் செயற்பாட்டாளராக இறைபணியையும், தமிழ்த்தேசியப் பணியையும் சமாந்தரமாக முன்னெடுத்து அடக்குமுறைகளுக்கு உள்ளான மனித குல விடுதலைக்காக பாடுபட்ட வழிகாட்டிகள் வரிசையில் ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்களும் வரலாற்றில் தன் பெயரை பொறித்துக்கொண்டார்.

விடுதலைப்போரட்டத்தின் ஆயுத மௌனிப்பிற்கு பின்னர் சிங்களப்பேரினவாதத்தின் அடக்குமுறைகளும் நில வன்பறிப்புக்களும், சட்டத்திற்குப்புறம்பான கைதுகள், காணாமல் ஆக்கப்படுதல்கள், தமிழர் குடியிருப்புக்களை சுற்றிலும் திட்டமிட்டு அமைக்கப்பட்டு வரும் இராணுவ முகாம்கள் என மிகவும் தீவிரமாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற கடந்தகால ஆபத்தான சூழ்நிலைகளிலும் இறுதிப்போர்ச்சூழலில் சர்வதேசத்தின் ஆதரவுடன் சிங்கள இனவாத அரசு மேற்கொண்ட இனப்படுகொலை தொடர்பாகவும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவும் துல்லியமான கணக்கெடுப்புடன் அதன் விவரங்களை உள்நாட்டிற்குள்ளும் வெளியுலகத்துக்கும் தெரிவித்து அதனை ஆதாரங்கள் மூலமாக நிரூபித்தும் காட்டிய வணக்கத்துக்குரிய ஆயர் அவர்களின் மறைவு என்பது உரிமைக்காக போராடி வரும் தமிழ்பேசும் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இருப்பினும் இழப்புக்கள் எவையும் எமது மக்களுக்கு புதியனவல்ல, தமிழ் மக்கள் அனைவரும் விரைவில் மீண்டெழுந்து மன்னார் மறைமாவட்ட ஆயர் அவர்கள் எமது மக்களுக்காக ஆற்றிய ஆன்மீக வழிப்போராட்டங்களை பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை சிவில் சமூக அமைப்பாகிய நாம் சிங்கள பேரினவாத அரசிற்கும் அதன் திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் தொடர்ந்தும் அமைதி வழியில் முன்னெடுத்துச் செல்வோம்.

எமது நாகரிக அரசியல் மரபுகளைத் தழுவிய சட்ட ரீதியான அறவழிப் போராட்டங்களை சிங்கள அரசு தடை செய்த போதும், அமைதி வழியில் போராடுகின்ற அறவழி உணர்வுகளை நிர்தாட்சண்யமாக அசட்டை செய்யும் போதும், அடக்குமுறைகரம் கொண்டு போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு பல்வித உயிர் அச்சுறுத்தல்களை ஏற்படுத்திய போதும் உலகின் ஒடுக்கப்பட்ட மக்களின் சுதந்திர விடுதலைப்போராட்ட வரலாறுகளும், எமது கடந்து வந்த வலிகள் நிறைந்த வரலாற்றுப் படிப்பினைகளும் எமக்கு மன உறுதியை அளிக்கின்றன.

தமிழ் மக்களாகிய நாம் காலம் காலமாக அமைதி வழியிலேயே எங்களது அரசியல் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். நாம் எமது மக்களின் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்காக எமது முன்னோர்களின் அறவழியில் அடையாள ரீதியாக நடத்திய அறவழிப் போராட்டங்களைக் கூட சிறிலங்கா பேரினவாத அரசுகள் எதேச்சதிகார, சர்வாதிகார கரம் கொண்டு நசுக்கின.

இருந்தாலும் வரலாறுகளின் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு எமது மக்களின் உரிமைகளான தன்னாட்சி அதிகார கோட்பாடுகளை வலியுறுத்தியும், திட்டமிடப்பட்ட இனவழிப்பு, நில ஆக்கிரமிப்பு, வலிந்து காணமல் ஆக்கப்பட்டோர், சிறைக்கைதிகள் விடுதலை தொடர்பிலான அனைத்து போராட்டங்களையும், ஒன்றுபட்ட தமிழ் இனத்தின் சிங்கள பேரினவாத இனவாத நடவடிக்கைகளுக்கு எதிரான எதிர்ப்பு இயக்கமாக இருந்து, தமிழ் மக்களின் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய ஆண்டகை இராயப்பு ஜோசப் அடிகளார் அவர்களின் வழியில் 'பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கம்' தொடர்ந்தும் போராடும் என உறுதி எடுத்துக்கொள்கின்றது.

இந்த நாளில் ஆண்டகை அவர்களின் ஆத்மா இறைவனடி சேர நாம் அனைவரும் இறைவனை பிரார்த்தித்துக்கொண்டு, மறைந்த அந்தப்புனிதரை, மானுடநேசரை இழந்து தவிக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரவித்துக்கொள்ளும் இந்நாளில் நாம் அனைவரும் இன, மத, அரசியல்கட்சி பேதமற்ற ஒன்றுபட்ட தமிழர் சக்தியாக ஒன்றிணைந்து அனைத்து ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் துணிந்து போராடுவோம் என ஆண்டகையின் இழப்பின் வலிகளுக்குள் எம்மை உள்ளிருத்தி உறுதியோடு பயணிப்போமென உறுதி எடுத்துக்கொள்வோம். – என்றுள்ளது.

# ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை ஒடுக்கப்பட்ட தமிழருக்காக குரல்கொடுத்தவர்

## கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரங்கல்

மன்னார் மாவட்டத்தின் முன்னாள் ஆயரும் தமிழ்மொழி, தமிழினப் பற்றாளருமான அதி வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு பெருந்துயர் உறுகிறோம்.

இவ்வாறு கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வழங்கிய இரங்கலுரையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு –

மக்கள் சேவையே கடவுள் சேவை என்ற கோட்பாட்டுக்கு இணங்க ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை தனது வாழ்நாள் முழுவதும் மக்களோடு மக்களுக்காக வாழ்ந்தவர்.

குறிப்பாக போர்க் காலத்தில் தமிழ்மக்கள் பட்ட துன்ப, துயரத்தில் மதம் கடந்து பங்கு கொண்டவர். அவர்களுக்கு காப்பரணாக நின்று துணிச்சலோடு தொண்டாற்றியவர்.

ஒரு கிறிஸ்தவ மத குருவுக்கு என்ன இலக்கணம் வகுக்கப்பட்டிருக்கிறதோ அந்த இலக்கணத் துக்கு எடுத்துக்காட்டாகக் கடைசி வரை ஆயர் அதி வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை வாழ்ந்து காட்டியவர்.

ஆயர் என்ற பதவிக்கு உரித்தான உயர் கல்வி, நம்பிக்கை, நல்லொழுக்கம், அன்பு, அருள், பக்தி, அறிவாற்றல் போன்ற மனிதப்பண்புகள் ஆகியவற்றில் தலைசிறந்தவராக விளங்கியவர். மதம் கடந்து எல்லா மக்களதும் நன்மதிப்பைப் பெற்ற மானிடவாதி.

ஆயர்என்றால் 'மேய்ப்பவர்' என்பது நேரடிப் பொருள். கிறிஸ்தவ சமயத்தில் ஆயர் என்றால் மக்களை வழிநடத்துபவர் என்று பொருள். இயேசு தம்மை ஞுநுரழுவ்நல்ல ஆயர் (Good Shepherd) என்று அறிமுகப்படுத்துகிறார். அவரிடத்தில் நம்பிக்கை கொண்டு அவரால் வழிநடத்தப்படும் ஆடுகளை (மனிதர்களை) அவர் கண்காணித்துக் காக்கிறார்.

ஏழைகளும் வறியவர்களும் படும் துன்பத்தையும் துயரத்தையும் கண்டு யார் அவர்களுக்கு உதவ வருகிறார்களோ அவர்களே உண்மையான இறை அடியார்கள். அவர்களே மக்கள் பணியாளர்கள். அவர்களே ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்.

ஆயர் வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை அப்படிப்பட்டவர். ஆயிரத்தில் ஒருவர். ஆயர் அதி வண. இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களது மறைவு தமிழ்மக்களிடையே பெரிய சோகத்தை மட்டுமல்ல பெரிய வெறுமையையும் தனிமையையும் ஏற்படுத்தியுள்ளது.

அவற்றை எமது ஓயாத உழைப்பால் நிரப்புவதே நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

தமிழ்மக்களுக்குத் தொண்டு செய்தோர் மறைவதில்லை. அவர்கள் மக்கள் நெஞ்சங்களில் காலம் கடந்தும் கொலு வீற்றிருப்பார்கள். தமிழினத்தின் வரலாறு எழுதப்படும் போது ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்களுக்கு பல பக்கங்கள் ஒதுக்கப்படும் என்பது நிச்சயம்.

எம் தாயகத் தமிழர்களின் துயரத்தில் கனடா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கு கொள்கிறது. – என்றுள்ளது.

# துயரப்பட்ட தமிழர்களின் துயர் துடைத்தெறிய துணிவுடன் பயணித்த துறவி நிரந்தர துயிலில்!

இலங்கை வரலாற்றில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர்களில் முக்கியமான காத்திரமான பங்கு வகித்தவர் அருட்தந்தை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை என்பதுடன் தமிழர்களின் ஒற்றுமைக்கும் பாரிய பணியாற்றியவர் ஆண்டகையே என ஜனநாயக மக்கள் முன்னணி உபதலைவரும் ஊடக செயலாளரும் கொழும்பு மாநகர சபை ஜ.ம.மு. உறுப்பினர்களின் குழுத்தலைவருமான சி. பாஸ்கரா தனது இரங்கலுரையில் தெரிவித்தார்.



அவரது உரையில் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கையில் தமிழர்களுக்கெதிராக நடைபெற்ற உச்ச தாண்டவ இன அழிப்பு வேளையில் மக்களோடு மக்களாக மக்களின் துயரறிந்து மக்களுக்காக இலங்கையிலும் உலகின் பல நாடுகளுக்கும் எமது மக்களுக்காக உரிமைக் குரலை ஓங்கி ஒலிக்க செய்த பெருமை அடிகளாரையே சாரும்.

இலங்கையில் நடந்த பல போராட்டங்களில் அடிகளார் கலந் துகொண்டு மக்களுக்காகக் குரல் கொடுத்தமையையும் உரத் துத் துணிவுடன் கருத்துரைத்ததையும் வாழ்க்கையில் மறக்க முடியாததொன்றாக எமது சமுதாய வரலாற்றில் பதியப்படும்.

அடிகளாரின் உரிமைக் குரலின் உச்ச வேளையில் நோய் வாய்ப்பட்டு மீளாத் தூக்கத்துக்கு சென்றது தமிழ் பேசும் மக்களுக்கும், பாதிக்கப்படும் மக்களுக்கும் பாரிய இழப்பாகும் என தலைவர் மனோ கணேசனதும் கட்சியினதும் தனது இரங்கலுரையில் பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவருக்கு இலங்கைக் கடலில் சட்ட ரீதியான அனுமதியா?

## எதிர்க்கின்றது தமிழ்க் கூட்டமைப்பு

ந.லோகதயாளன்

இலங்கை கடற்பரப்பிற்குள் முறையான அனுமதிகளை பெற்று - இலங்கையில் அனுமதிக்கப்பட்ட தொழில் முறைமைகளில் மட்டும் - மீன்பிடியில் ஈடு பட இந்திய மீனவர்களிற்கு இலங்கை அரசு அனுமதி வழங்குவதனால் தற்போது காணப்படும் எல்லை தாண்டிய மீன்பிடிப் பிரச்சினைக்குத் தீர்வு கிட்டுமா என மீனவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

யுத்தத்தின்போது அழிவடைந்த கடற்றொழில், போரின் போதும், போர் ஓய்வின்போதும் பாஸ் என்ற பெயரில் நசுக்கப்பட்டு, போர் ஓய்வின் பின்னர் கரையோர அபகரிப்பு, தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல், தடை செய்யப்பட்ட தொழில் முறைமை, அரச உதவிகள் அற்ற தன்மை ஆகிய பிரச்சினைகளிற்கே முகம் கொடுக்க முடியாத சூழலில், இந்திய



மீனவர்களின் அத்து மீறலினால் அழிக்கப்படும் தொழில் உபகரணங்கள் என்பதற்கு அப்பால் கடலில் எல்லை போட்டது போன்று வடக்கு மாகாணத்தின் கரையை அண்மிப்பது வரையில் பட்டியலிடப்படுகின்றது.

'உடல் மண்ணுக்கு; உயிர் தமிழிற்கு' என நாம் கூறினால் அரசோ 'நிலம் சீனாவிற்கு; கடல் இந்தியாவிற்கு' என்ற மாதிரி நடக்க முயல்கின்றது. ஒரு கையால் அரவணைக்கும் இந்தியா மறுகையால் குத்த அரசிற்கு துணைபோகக் கூடாது. இந்த விடயத்தில் தன் கையைக் கொண்டு தனது கண்ணை குத்தும் செயலை இலங்கை அரசு மிகக் கச்சிதமாக நிறைவேற்ற முயல்கின்றதா என்ற சந்தேகமும் தற்போது பலருக்கு எழுகின்றது.

இவ்வாறு மிகப் பெரிய ஒரு விடயம் இடம்பெறலாம் என அஞ்சுகின்றபோதும், அமைச்சர் சொன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தி அறிக்கைகளும் விடும் சில மீனவ சங்கங்கள் தற்போது இறுக வாயை மூடியவாறு இருக்கின்றன. ஏனெனில் இது அமைச்சரின் சிந்தனை என்பதனாலோ என்னவோ தெரியவில்லை.

### சுமந்திரன் ஆணித்தரம்

இதேபோன்று கூட்டமைப்பு இந்தியாவின் நலன் சார்ந்து நிற்பதாகக் கூறப்படுவதனால் வாய் திறக்கவில்லையா என கூட்டமைப்பின் பேச்சாளரை தொடர்பு கொண்டு கேட்டபோது -

இந்திய மீனவர்களைப் பொறுத்த மட்டில் அவர்களின் முதலீட்டிற்கான வருமானம் இன்மையும், உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் இல்லாத காரணத்தால் வாழ்க்கைச் செலவினை ஈடு செய்ய முடியாது திணறுகின்றனர் எனபது உண்மைதான். இதேநேரம் எமது மீனவர்களைப் பொறுத்த மட்டில் இவை மாத்திரம் அல்ல பிரச்சினை, போரின்போது எமது மீனவர்களின் ஆயிரக் கணக்கான படகுகள் அழிக்கப்பட்டன. நூற்றுக் கணக்கான படகுகள் களவாடப்பட்டன. இன்னும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படகுகளில் இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்றவர்கள் படகுகளை அங்கு கைவிட்டே தாயகம் திரும்பினர்.

இதற்கும் அப்பால் இலங்கை மீன்பிடியில் பின்பற்றப்படும் சட்ட முறைமை ஓரளவு திருப்திகரமாக காணப்படுகின்றபோது இந்தியாவில் ட்றோலர் முறைமை, இரட்டை மடி, ஊசி வலை என எமது நாட்டில் தடை செய்யப்பட்ட முறையில் மீன்பிடியில்

> எமது மீனவர்களின் ஆயிரக் கணக்கான படகுகள் அழிக்கப் பட்டன. நூற்றுக்கணக்கான படகுகள் களவாடப்பட்டன. இன்னும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படகுகளில் இந்தியாவிற்கு அகதி களாகச் சென்றவர்கள் படகுகளை அங்கு கைவிட்டே தாயகம் திரும்பினர்.

**மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து அமைச்சர்கள் மட்டத்தில் இந்தியா மற்றும் இலங்கை இடையிலான பேச்சுவார்த்தைகள்**

**நவம்பர் 05, 2016**

இந்தியா மற்றும் இலங்கை இடையே மீனவர்கள் பிரச்சினைகள் குறித்து அமைச்சர்கள் மட்ட பேச்சுவார்த்தை புது தில்லியில், நவம்பர் 5, 2016, இன்று நடைபெற்றது. வெளிவிவகார அமைச்சர் திருமதி சுஷ்மா ஸ்வராஜ் மற்றும் விவசாயம் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் ராதா மோகன் சிங், இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் கடற்றொழில் அமைச்சர் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் மஹிந்த அமரவீர ஆகியோரை சந்தித்தனர். சாலைப் போக்குவரத்து, நெடுஞ்சாலை & கப்பல் அமைச்சர் திரு பொன் ராதாகிருஷ்ணன் மற்றும் இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் திரு எம்.ஏ. சுமந்திரன் இரண்டு பிரதிநிதிகளின் ஒரு பகுதியாக இருந்தன.

மீனவர்கள் பிரச்சினைகள் ஒரு நிரந்தர தீர்வு கண்டுபிடிக்க உதவ சாத்தியமான வழிமுறைகள் மீது கருத்துக்களைப் அமைச்சர்கள் பரிமாறிக் கொண்டனர்.

மீன்பிடித்துறை தொடர்பில் கூட்டு செயற்பாட்டுக் குழு ஒன்று ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சந்திக்கவும் , கடற்றொழில் அமைச்சர்கள் ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் இடையே ஒரு கூட்டம் நடத்த அமைப்பு செய்யவும் அவர்கள் ஒப்புக் கொண்டனர். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்கள், கரையோரப் பாதுகாப்புப் படையினர் மற்றும் இரு நாடுகளின் கடற்படைகள் இருந்து பிரதிநிதிகள் ஆகியோர் தூதுக்குழுக்களுள் அடங்குவர். முதலாவது மந்திரிகள் கூட்டம் கொழும்பில், ஜனவரி 02, 2017 அன்று நடைபெற்றது.

கூட்டு செயற் குழு (JWG) இற்கான நிபந்தனை குறிப்புகள் பின்வருமாறு:

(i) விரைவில் கீழ்மட்டத்தில் இழுத்து செல்லும் நடைமுறையினை முடிவுக்கு கொண்டு வருவது நோக்கிய

ஈடுபட்டமையினாலேயே அந்தப் பிரதேச கடல்வளம் அழிவடைந்ததுஎன்ற உண்மையைஏற்றுக்கொள்ள வேண்டும். தற்போதும் இந்தியாவில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுபவர்களில் எத்தனை வீதமானவர்கள் சொந்த தொழில் புரிகின்றனர்? எத்தனை வீதமானோர் தினக் கூலிக்கு வருகின்றனர்? - என்பதனை ஆராய்ந்தால் இதன் உண்மை புரியும். ஆனால் எமது மீனவர்கள் தற்போதும் 20 அடி பிளாஸ்ரிக் படகில் 15 குதிரைவலு இயந்திரம் பொருத்திய படகில் பயணித்தே தொழிலில் ஈடுபட்டமையோடு அங்கீகரிக்கப்பட்ட வலைகளைப் பயன்படுத்தியமையினாலேயே எமது பிரதேச கடல்வளம் இன்றும் காக்கப்பட்



டுள்ளது.

இதற்கும் அப்பால் போரிற்கு முன்பு 1983ஆம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் பெறப்பட்ட கடல் உற்பத்தியின் அளவை போர் முடிந்து 12 ஆண்டின் பின்பும் எமது மீனவர்களால் பெறமுடியாத நிலைமையே காணப்படுகின்றது. வட்டிக்கு பணம் பெற்றும், வங்கிகளில் உடைமைகளை அடகு வைத்தும் படகுகளைப் பெற்றவர்களும் தத்தமது படகுகள் அழிவடைந்த நிலையில் அல்லற்படுகின்றனர். அவர்களின் நிலைமை என்ன? தாய்த் தமிழக உறவுகள் எமது மக்களிற்கு எத்தனையோ தடவை, எத்தனையோ வழிகளில் உதவியமையை எமது உறவுகள் மறக்கவில்லை. அதற்காக எஞ்சியுள்ள வளமும இல்லாமல் போகுமா என்ற நியாயமான ஏக்கத்தை போக்க வேண்டிய பொறுப்பும் உண்டு.



இவற்றின் அடிப்படையில் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக எமது கடலில் இந்திய மீனவர்களை அனுமதிப்பது பொருத்தமற்ற செயல். இதனால் எதிர்காலத்தில் எமது மீனவர்களையும் இந்திய மீனவர்களையும் மோத விடும் சூழ்ச்சியும் அரங்கேற்றப்படலாம். அதனால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டால் பிணையிலும் வெளிவர முடியாத தன்மையும் ஏற்பட்டு இந்திய மீனவர்களிற்கும் சொல்லொணாத் துன்பமே ஏற்படும்.

இவற்றை அடிப்படையாக கொண்டு 2016ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி டில்லியில் இடம்பெற்ற மீனவர் விடயம் சார் பேச்சுகளின் அடிப்படையில் இந்திய மீனவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுவிப்பதும் தடை ஏற்படும்.

எனவே இந்தியா, தமிழ்நாடு அரசு ஊடாக முடிந்த வரை உடனடியாக பலநாள் படகுகளை தமிழ்நாடு மீனவர்களிற்கு வழங்கி அவர்களை ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு ஊக்குவிப்பதே நல்லது. இந்த விடயத்திற்கான நிரந்தரத் தீர்வாக அதுவே அமையும். அதனைவிடுத்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீனவர்களின் விருப்பிற்கு மாறாக, இந்திய மீனவருக்கு சட்டரீதியாக அனுமதி வழங்கும் முடிவிற்கு உடன்பட முடியாது. அவ்வாறு உடன்பட்டால் அதற்கான முழுப்பொறுப்பையும் அதே அமைச்சரே ஏற்க வேண்டும். இதனை அமைச்சரவைப் பேச்சாளர்களும் வலியுறுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. - என்றார் சுமந்திரன்.

### சுரேஷ் கருத்து

தமிழக மீனவர்கள் விடயத்தில் எந்த வகையான முடிவினை எடுப்பதானாலும் அது எமது மீனவர்களின் இணக்கத்தைப் பெற்றதாக இருக்க வேண்டுமே அன்றி அவர்கள் மீது எமது முடிவை திணிப்பதாக அமையக் கூடாது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் தெரிவிக்கின்றார்.

### சமாசத் தலைவர் கூற்று

இது தொடர்பில் வடமராட்சி மீனவர் சங்கங்களின் சமாசத் தலைவரும் மீன்பிடி அமைச்சரின் சகல கூட்டங்களிலும் பங்குகொள்ளுபவருமான வர்ணகுல சிங்கத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது -

ஊடகங்களில் வந்த செய்தி தொடர்பில் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தொடர்பு கொண்டு வினாவியபோது அந்தச் செய்திகளில் நூறுவீதம் உண்மையே கிடையாது எனப் பதிலளித்தார். இதனால் பொறுமை காக்கின்றோம். அதனை மீறி வழங்கினால், அப்போது பார்ப்போம். - என்றார்.

இதேநேரம் மீனவர்களிற்காக குரல் கொடுப்பதாக கூறும் பல முக்கிய அரசியல் கட்சிகள் கூட இந்த விடயத்தில் இதுவரை வாய்திறக்கவில்லை எனவும் பல மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்
Kalaikkathir

# மெய்நிகர் வகுப்பறை

# Online Classroom

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் –
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)




மெய்நிகர் கற்பித்தல் சுவாரஸ்யமான வாய்ப்புகளைத் திறந்திருக்கிறது.

‘எங்கு வேண்டுமானாலும் கற்பதற்கும் கற்றல் செயல்முறையை எடுத்துச் செல்வதற்கும் உதவுகிறது.’ இதனை நிச்சயமாக சில பாரம்பரிய ஆசிரியர்கள் எதிர்க்கிறார்கள். கற்றல் – கற்ப்பித்தல் வேலையை எல்லா இடங்களிலும் எடுத்துச் செல்வது என்பது ‘வேலை எப்போதும் பின்தொடர்வதைக் குறிக்கிறது.’ இது ஒரு தலையிடியாக இருக்கிறது. சமயலறையில் புட்டுக்குத்தும் போதும் நிம்மதியாக சயனிக்கும் போதும் மெய்நிகர் கல்வி ஒவ்வொருவரையும் பின்தொடர்கிறது. ஒரு கற்றலில் மாணவர்கள் எப்போது வேண்டுமானாலும்




உள்நுழைவதற்கான நெகிழ்வுத்தன்மை இருந்தால் இந்தத் தலையிடி அதிகரிக்கும். இது ஏற்புடைய ஒரு காரணமென்றாலும் இன்று மெய்நிகர் கற்றலும் கற்பித்தலும் சுவாரசியமானதாகவே காணப்படுகிறது எனலாம்.

சிறப்பான மெய்நிகர் கற்றலுக்கு கற்றல் மேலாண்மை அமைப்பு தேவைப்படுகிறது (எல்.எம்.எஸ்.), ஒரு நல்ல வைஃபை இணைப்பு, வெப்கேம் மற்றும் விசைப்பலகை கொண்ட மடிக்கணினி, ஒரு கேட்பதற்கான காதுகுழாய்கள் மற்றும் டயல் செய்ய ஒரு தொலைபேசி தேவைப்படுகின்றன. இந்தத் தொழில்நுட்பம் கல்வியில் 21 ஆம் நூற்றாண்டின் கற்றலுக்கு ஒன்லைன் திட்டங்களை முன்னெப்போதையும் விட சிறப்பாக செயல்பட உதவுகிறது. அதாவது கணினிகளில் உள்ளமைக்கப்பட்ட கமராக்கள் மற்றும் ஒலிவாங்கிகள், வீடியோவை விரைவாகவும் எளிதாகவும் பார்க்கும் திறன், கலந்துரையாடல்களையும் தேர்வுகளையும் அனுமதிக்கும் ‘வெப் 2.0’ கட்டமைப்புகள் – இவை அனைத்தும் பெரும்பாலான மக்கள் அணுகக்கூடிய அடிப்படை தொழில்நுட்பங்கள் ஆகும். இது இன்று மெய்நிகர் வகுப்பறைகளை தாக்க வன்மையுள்ளவையாக்குகின்றன.

மெய்நிகர் கற்றலின் ஆரம்ப வடிவங்கள் மிகவும் ‘நிலையானவை’யாகவே இருந்தன. பாடநெறி உள்ளடக்கத்தின் பெரும்பகுதி எழுத்தில் இருந்தது, மேலும் சில வீடியோக்கள் அல்லது பிற ஊடாடும் உள்ளடக்கம் அனைத்தும் தனிப்பட்ட பயன்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டிருந்தன. இப்போது அப்படியல்ல. ஓர் ஈர்க்கக்கூடிய ஒன்லைன் கற்றல் செயல்திட்டத்திற்கான தொழிலநுட்பம் கிடைக்கிறது. சிறந்த, எளிதாக அணுககக்கூடிய தளங்களில் நிகழ்நேர விவாதங்களை எளிதாக்கும் நேரடி வகுப்புகளைக் கொண்டிருக்க முடிகிறது.

புதிய தொழில்நுட்பத்தில் நிபுணத்துவம் பெறுவது எளிதல்ல. ஆனால் அதில் தேர்ச்சிபெற்றிருந்தால்தான் சிறந்த மெய்நிகர் ஆசிரியராக முடியும். ஒரு ஆசிரியர் அதில் தேர்ச்சி பெற்றாக வேண்டும். ஒரு கற்பித்தல் பணியில் இருக்கின்ற ஆசிரியர் தனது பயணத்தை டிஜிட்டலில் எடுத்துக்கொள்வது சிறந்தது. இதற்கான பயிற்சித்திட்டங்களை தொடர்ச்சியாக உயர்கல்வி நிறுவனங்களும் கல்வித்திணைக்களங்களும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான பயிற்சிச் சான்றிதழ்கள் இல்லாதவர்கள் கற்பித்தல் துறையில் இருக்கமுடியாது என்ற நிலை உருவாக வேண்டும்.

கொவிட் 19 இரண்டாம் அலை உலகத்தை அச்சுறுத்திவரும் இந்த நிலையில் இணையத்தைப் பயன்படுத்திக் கற்பிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பதன் காரணமாக ஒன்லைன் ஆசிரியர்கள் தொழில்நுட்ப தேர்ச்சியுள்ளவர்களாகவும் அதன் ஆர்வலர்களாகவும் இருக்க வேண்டும். சமீபத்திய ஒன்லைன் கருவிகள் மற்றும் தொழில்நுட்பத்துடன் வசதியாகவும் பரிச்சயமாகவும் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் அவர்களின் அன்றாட வாழ்க்கையில் தொடர்ந்து தொழில்நுட்பத்தைப்பயன்படுத்தத் தயங்கத் தேவையில்லை. அதிலிருந்து விலகியிருப்பது புனிதமானது என்று எண்ணத் தேவையில்லை. வயது போய்விட்டதே என்னால் முடியாது என்ற எண்ணம் தேவையற்றது. ஆசிரியர்கள் சமீபத்திய கண்டுபிடிப்புகளுடன் தம்மைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். அது ஒரு கட்டாயச் சூழ்நிலையாகும்.

ஆசிரியர்கள் – மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் புதிய கருவிகளைக் கற்றுக்கொள்ள உதவ வேண்டியிருக்கிறது. குறிப்பாக ஒன்லைன் ஆசிரியர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய முக்கிய தொழில்நுட்பம் அவர்களின் பள்ளியின் கற்றல் மேலாண்மை அமைப்பு (எல்.எம்.எஸ்.) ஆகும்.

அதாவது, பாடங்களை ஒன்லைனில் வழங்குவதற்கும் ஆண்டு முழுவதும் மாணவர்களுடன் தொடர்புகொள்வதற்கும் பள்ளிகள், உயர்கல்வி நிறுவனங்கள் பயன்படுத்தும் ஒன்லைன் கருவிகளை உள்ளடக்கிய கல்வித் தொழில்நுட்ப தளங்கள் இவையாகும்.

இந்தத் தளங்களின் வாயிலாக ஆசிரியர்கள், தமது மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், தரவு அடிப்படையிலான தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் திட்டங்களை உருவாக்கவும், தரவு காட்சிப்படுத்தல் மற்றும் பகுப்பாய்வு திட்டங்களைப்பயன்படுத்துகின்றனர். ஆகவே, இன்றைய யுகத்தில் ஒரு நல்ல ஆசிரியர் என்பவர் தொழில்நுட்பத்துடன் தன்னை விரைவாக ஒன்றிணைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இதனால் கொவிட் 19 நோய்த் தொற்றின் தாக்கமாக மாணவர் இடைவிலகலை குறைக்க முடியும். கற்றலை மாணவர்கள் அணுகக்கூடியதாக ஆக்க முடியும்.

புதிய தொழில்நுட்பத்தில்
நிபுணத்துவம் பெறுவது எளிதல்ல.
ஆனால் அதில் தேர்ச்சிபெற்றிருந்தால்தான்
சிறந்த மெய்நிகர் ஆசிரியராக முடியும். ஒரு
ஆசிரியர் அதில் தேர்ச்சி பெற்றாக வேண்டும்.
ஒரு கற்பித்தல் பணியில் இருக்கின்ற
ஆசிரியர் தனது பயணத்தை டிஜிட்டலில்
எடுத்துக்கொள்வது சிறந்தது. இதற்கான
பயிற்சித் திட்டங்களை தொடர்ச்சியாக
உயர்கல்வி நிறுவனங்களும் கல்வித்தி
ணைக்களங்களும் மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறான பயிற்சிச் சான்றிதழ்கள்
இல்லாதவர்கள் கற்பித்தல் துறையில்
இருக்கமுடியாது என்ற நிலை
உருவாக வேண்டும்.

ஒன்லைன் ஆசிரியரின் வேலையின் பெரும்பகுதி மாணவர்களுக்கு கேள்வி அல்லது உதவி தேவைப்படும்போது கிடைக்க வேண்டும். வகுப்புகள் நேரில் நடைபெறாதமையால், ஆசிரியர்கள் அவர்களைத் தொடர்புகொள்வதற்கான வழிகளை




வழங்க வேண்டும், விரைவாக பதிலளிக்க வேண்டும். மின்னஞ்சல், வீடியோ கொன்பரன்சிங் மற்றும் தொலைபேசி அழைப்புகள் ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களுடன் தொடர்ந்து இணைந்திருக்கப் பயன்படுத்தும் சில நுட்பங்கள் ஆகும். ஒரு சிறந்த ஆசிரியர் விரைவாகவும் திறமையாகவும் உதவிகளை வழங்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் அவர்கள்தான் அதன் வல்லுநர்கள்.




மெய்நிகர் வகுப்பறையில் மாணவர்களை செயல்திறன் உள்ளவர்களாக வைத்திருப்பதற்கு ஒவ்வொரு நாளும் சோதனைகள் அல்லது வினாடி வினாக்கள் இருக்கவேண்டுமென்பதல்ல. அவை இல்லாதிருந்தாலும், ஆசிரியர்கள் மாணவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் அவர்கள் பின்வாங்குவதற்கு முன்பு தமது காலடியை எடுத்து வைப்பதற்கும் பல வழிகள் உள்ளன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுகாதார ஸ்தாபனம் அங்கீகரிக்காத தடுப்பூசியை எமது பிரஜைகளுக்கு வழங்குவது ஒழுங்கற்ற செயல்

## அரச மருத்துவர் சங்கம் சுகாதார அமைச்சுக்குக் கடிதம்

கொழும்பு, ஏப். 05

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்படாத தடுப்பூசியை எமது பிரஜைகளுக்கு வழங்குவது ஒழுங்கற்ற செயற்பாடாகும் என்று இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு அந்த சங்கம் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது. அந்தக் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கையர்களுக்குக்கூட உபயோகிப்பதற்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையால் அங்கீகரிக்கப்படாத ஒரு தடுப்பூசியை எமது நாட்டிலுள்ள பிரஜைகளுக்கு வழங்குவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பது ஒழுங்கற்ற செயல் என அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் அனுமதியின்றி எந்தவொரு தடுப்பூசியையும் நாட்டு மக்களுக்கு வழங்க வேண்டாம் எனவும் அந்தச் சங்கம் சுகாதார அமைச்சை வலியுறுத்தியுள்ளது.

# உயிர்த்த ஞாயிறு திருப்பலி மன்னாரில் சிறப்புற நடந்தது





மன்னார், ஏப். 05

உயிர்த்த ஞாயிறு திருப்பலி மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 11.15 மணிக்கு இடம் பெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் குருக்கல் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இதன் போது மக்கள் சுகாதார நடை முறைகளுக்கு அமைவாகக் கலந்து கொண்டனர்.

திருவிழா திருப்பலி இடம்பெற்ற போது ஆலயத்தைச் சூழ இராணுவம் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புக்கள் பலப் படுத்தப்பட்டிருந்தன.

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள பல்வேறு ஆலயங்களிலும் நள்ளிரவு திருப்பலி இடம் பெற்றதோடு, தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலையும் திருவிழா திருப்பலி ஆலயங்களில் ஒப்புக் கொடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பலத்த பாதுகாப்புகளுக்கு மத்தியில் சியோன் தேவாலயத்தில் ஆராதனை







மட்டக்களப்பில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சியோன் தேவாலயம் உட்பட அனைத்து தேவாலயங்களிலும் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இராணுவ மற்றும் பொலிஸார் பாதுகாப்பு படையினரின் பாதுகாப்புக்கு மத்தியில் உயிர்த்த ஞாயிறு விசேட ஆராதனைகள் இடம்பெற்றன.

கடந்த 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதலுக்குள்ளான சீயோன் தேவாலயத்தின் கட்டடவேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்ட நிலையில் மன்ரசா வீதியில் சியோன் தேவாலயம் புதிய கட்டடம் நிர்மானிக்கப்பட்டு திறக்கப்பட்டது.

இந்த நிலையில் தேவாலயத்தில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் சீயோன் தேவாலய போதகர் ரொசான் மகேசன் தலைமையில் விசேட ஆராதனைகள் இடம்பெற்றன. இதில் இறைவாசிகள் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டதிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்களில் இராணுவத்தினர், கடற்படையினர், பொலிஸார், புலனாய்வுப் பிரிவினர் என பலத்த பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள நிலையில் விசேட ஆராதனைகள் இடம் பெற்றுள்ளதுடன் பல பிரதான வீதிகளில் இராணுவத்தினர் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். பொலிஸார், இராணுவ மோட்டார் சைக்கிள் பிரிவு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

# ஆயர் இராயப்பு ஜோசப்பின் மறைவுக்கு அஞ்சலி; மன்னார் தனியார் பஸ் சேவைகள் இன்று நிறுத்தம்

மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்கம் இன்று திங்கட்கிழமை இடம்பெற உள்ள நிலையில் இன்று துக்க நாளாக அனுஷ்டிக்கும் வகையில் மன்னார் மாவட்டத்தில் இருந்து வட மாகாணத்துக்கான தனியார் போக்குவரத்துக்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளன என மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மறைந்த மன்னார் மறை மாவட்ட ஓய்வு நிலை ஆயர் கலாநிதி இராயப்பு ஜோசப் ஆண்டகையின் இறுதி நல்லடக்கம் இன்று திங்கட்கிழமை இடம் பெறவுள்ளது.

இன்றைய நாள் துக்க நாளாக அனுஷ்டிக்குமாறு பல்வேறு தரப்பினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு அமைவாக மன்னாரில் இருந்து வட மாகாணத்துக்கான தனியார் போக்குவரத்துச் சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டுள்ளன. மேலும் உள்ளூர் சேவைகளும் இன்று இடம்பெறா.

வட மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் இருந்தும் மன்னாருக்கான தனியார் சேவைகள் இன்று இடம் பெறா.

மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பிரதிநிதிகளும் ஆயரின் துயரில் பங்கு கொள்வதோடு, முழுமையாக துக்க நாளை அனுஷ்டிப்போம்.

இன்று இறுதி அஞ்சலிக்காக வருகின்ற மக்கள் மீண்டும் திரும்பிச் செல்ல தேவை ஏற்படின் விசேட போக்குவரத்துச் சேவைகள் எம்மால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் ரி.ரமேஸ் மேலும் தெரிவித்தார்.

# 17 கிலோ தங்கம் கடத்திய குற்றம்: கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்திறங்கியவரை சுங்கத்திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமாக பெருமளவு தங்கத்தை கொண்டுவந்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தனது உடைமைகளுக்குள் மறைத்து 17 கிலோகிராம் தங்கத்தை அவர் கடத்தி வந்துள்ளார். இதன் மதிப்பு 22 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையின் பெயரை 'சிங்களே' என மாற்றுக

## பௌத்த பிக்குகள் கோரிக்கை

இலங்கையின் பெயரை 'சிங்களே' என மாற்ற வேண்டுமேன பௌத்த பிக்குகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புதிய அரசமைப்பு தொடர்பில் பௌத்த பிக்குகள் நேற்று தங்களது பரிந்துரைகளை முன்வைத்திருந்தனர்.

இந்த பரிந்துரைகளில் நாட்டின் பெயர் சிங்களே என பெயரிடப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

ஸ்ரீ ரோஹன தரப்பைச் சேர்ந்த அனுநாயக்க ஓமாரே கஸ்ஸப தேரர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

வரலாற்றுக் காலம் போன்று நாடு மூன்று இராசதானிகளாக பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

## அம்பரெல்லா



ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

**மருத்துவ மதிப்புகள்**

நீரிழிவுநோய், அஜீரணம், சிறுநீர் பாதைதொற்று, உயர் இரத்த அழுத்தம், மூல நோய் போன்றவற்றினால் பாதிக்கப் பட்டவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

**முக்கிய வளரும் பகுதிகள்**

1. ஈரமான மற்றும் இடைநிலை மண்டலங்கள்
2. செய்கையின் தன்மை
3. வீட்டுத் தோட்டங்களில் சிதறிய சாகுபடியாக வளர்க்கப்படுகிறது

**பரிந்துரைக்கப்பட்ட வகைகள்**

* உயரமான உள்ளூர் வகை
* அறிமுகப்படுத்தப்பட்ட குள்ள வகை

**மதிப்பு சேர்க்கப்பட்ட தயாரிப்புகள்**

1. சட்னி, ஜாம், ஊறுகாய்

**நடுகை காலம்**

* ஜூலை - ஆகஸ்ட் (உயரமான உள்ளூர் வகை)
* ஆண்டு முழுவதும் (அறிமுகப்படுத்தப்பட்ட குள்ள வகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# புத்தூர்க் கொலையின் சூத்திரதாரிகள் இருவர் தனுஷ்கோடியில் ஞாயிறு கைது



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்.ஏப்.04

இந்தியாவின் தமிழகத்திற்குள் சட்டவிரோதமாக நுழைந்த நிலையில் இன்று காலை தனுஷ்கோடி அரிச்சல்முனை பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்ட இலங்கையைச்சேர்ந்த யாழ்ப்பாணம் புத்தூர் பகுதியில் இடம்பெற்ற கொலையுடன் தொடர்புபட்டவர்கள் எனச் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய - இலங்கை சர்வதேசக் கடல் எல்லை ஊடாக தமிழகத்திற்குள் இலங்கையைச் சேர்ந்த இருவர் சட்டவிரோதமாக நுழைந்தனர் எனத் தெரிவித்து இன்று காலை இரு இளைஞர்கள் இந்தியாவின் இராமேஸ்வரம் சுங்கத்துறை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் கியூ பிரிவு மற்றும் மத்திய பாதுகாப்பு வட்டார அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வந்த நிலையில் இருவரும் முதலில் மன்னாரைச் சேர்ந்தவர்கள் எனவும் தொழில் தேடி வந்தவர்கள் எனவும் கூறியுள்ளனர். இருப்பினும் தனுஷ்கோடி அரிச்சல்முனை சுங்கத்துறையினர் சந்தேகம் அடைந்தனர்.

இதனால் இருவரும் கியூ பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது யாழ்பாணத்தை சேர்ந்த இந்த இரு இளைஞர்கள் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி யாழ்ப்பாணம் வாதரவத்தை வீரவாணி பகுதியில் கொரோனா காரணமாக தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்த சந்திர கோபால் என்பவரைக் கொலை செய்த விடயத்தில் தொடர்புடையவர்களாக இருக்கலாம் எனவும், யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிரமாகத் தேடிவரும் நிலையில் இந்தியாவுக்கு தப்பி வந்துள்ளனர் எனவும் தெரிய வந்ததாகக் கூறப்படுகின்றது..

கைது செய்யப்பட்டவர்கள் புத்தூர் வாதரவத்தையைச் சேர்ந்த விஜயராசா நதீஸ் மற்றும் யோகேந்திரன் பிரதாபன் எனத் தமிழகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் இந்த விடயம் தொடர்பில் இலங்கை பொலிஸார் தரப்புக் கருத்து எதுவும் இதுவரை வெளிவரவில்லை.

# குடத்தனை வீட்டில் தனித்திருந்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 04

யாழ். வடமராட்சி கிழக்கு, குடத்தனைப் பகுதியில் இன்று காலை வீட்டில் தனியே தங்கியிருந்த இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குடத்தனை, தரவைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய முகுந்தன் சுலக்சன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பருத்தித்துறைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதையல் தோண்டிய இரு பிக்குகள் உட்பட 11 பேர் மாட்டினார்கள்

வவுனியா, ஏப்ரல் 04

வவுனியா, தாலிக்குளம் பகுதியில் புதையல் தோண்டிய குற்றச்சாட்டில் 11 பேரைப் பூவரசங்குளம் பொலிஸார் இன்று கைது செய்தனர்.

தாலிக்குளம் முத்துமாரி அம்மன் கோவில் வளவில் புதையல் தோண்டப்படுகின்றது எனப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து இன்று அதிகாலை குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் நிலத்தை தோண்டிக்கொண்டிருந்த இரு பிக்குமார் உட்பட 11 பேரைக் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து நிலத்தைத் தோண்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களை மீட்டதுடன், 2 கார்கள் மற்றும் ஓட்டோவையும் பறிமுதல் செய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பூவரசங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். (100)

# இந்திய மீனவர்கள் எவரையும் இலங்கைக்குள் அனுமதியாதீர்

## மீறினால் பெரும் போராட்டம் வெடிக்கும்; மீனவ சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை



இந்திய மீனவர்களை இலங்கைக் கடற் பரப்புக்குள் மீன்பிடிக்க அரசு அனுமதித்தால் அதை எதிர்த்து மாபெரும் போராட்டங்களை முன்னெடுப்போம் என்று மீனவ சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளன.

அனைத்து இலங்கை பொது மீனவ சம்மேளனத்தின் தலைவர் ரத்ன கமகே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக் கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதிப்பத்திரநடைமுறையை அமுல்படுத்த அரசு திட்டமிட்டு வருகின்றது என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். இந்திய மீனவர்களை இலங்கைக் கடற்பரப்புக்குள் மீன்பிடிக்க அனுமதிக்கும் பட்சத்தில், அதை எதிர்த்துப் பாரிய போராட்டங்களை முன்னெடுப்போம். இலங்கைக் கடற்பரப்பு இலங்கை மீனவர்களுக்கே சொந்தமானது. இந்தக் கடற்பரப்பில் வேறு நாட்டவர்கள் மீன்பிடிக்க அனுமதி இல்லை - என்றார்.

## தாக்குதல் நடத்தத் திட்டமா?

# வெடி மருந்துகளுடன் 4 பேர் சிக்கினார்கள்!

அனுமதிப் பத்திரமின்றி வெடி மருந்துகளைக் கொண்டு சென்ற நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவுல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவுல – எலஹெற வீதியில் நேற்று சந்தேகத்துக்கிடமான ஓட்டோவைச் சோதனைக்குட்படுத்தியபோதே வெடிமருந்துகளுடன் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவிசாவளை பகுதியைச் சேர்ந்த நான்கு சந்தேகநபர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 3 கிலோ 230 கிராம் அமோனியா, 135 கிராம் வோடர் ஜெல், 20 கிராம் வெடிமருந்து,14டெட்டனேட்டர்கள் உட்படப் பல்வேறு வெடிமருந்துகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாவுல பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.


## மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.


# இன்னும் நீதி கிடைக்கவில்லை

## சஜித் அணி கவலை



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை மையப்படுத்தி ஆட்சிக்கு வந்த தற்போதைய அரசு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் நீதி நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கவில்லை. எனவே, தாக்குதலின் பின்பலம் கண்டறியப்பட வேண்டும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹெக்டர்அப்புஹாமி வலியுறுத்தினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதலில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்து, உடல் அவயங்களை இழந்தனர். இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு கைதுகள் இடம்பெற்றிருந்தாலும் நல்லாட்சியின் போது நீதி கிடைக்கவில்லை. அரசுக்குள் இருந்து கொண்டு நீதிக்காகப் போராடினோம். அப்போராட்டம் பலனளிக்கவில்லை.

மேற்படி தாக்குதலை வைத்து பிரசாரம் செய்துதான் தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால். இன்னும் நீதி கிடைக்கவில்லை. தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் யார், திட்டமிட்ட குழுவினர் யார், நிதி உதவி வழங்கியது யார் என்பன உட்பட அனைத்து விடயங்களும் கண்டறியப்படவேண்டும். அத்திசையை நோக்கி அரசு பயணிப்பதாகத் தெரியவில்லை. அதே வேளை, மதத்தை அடிப்படையாகக்கொண்டு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் தரப்புகளுடன் கூட்டணி வைக்கப்படக்கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரிடம் எடுத்துரைத்துள்ளோம். அவரும் அதை ஏற்றுக்கொண்டுள்ளார் - என்றார்.

# பட்டப்பகலில் யுவதி வெட்டிப் படுகொலை

இளம் யுவதி ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் றோஹண தெரிவித்தார்.

கலேவெல, பட்டிவெல சந்தியில் நேற்றுப் பிற்பகல் 19 வயது யுவதியே இவ்வாறு படு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

கொலையாளியான சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கலேவெல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளிலிருந்து 268 பேர் நாடுவந்தடைவு

வெளிநாடுகளில் சிக்கியிருந்த மேலும் 268 பேர், நேற்று (ஞாயிற்றுக் கிழமை) அதிகாலை நாட்டை வந்தடைந் துள்ளனர் என விமான நிலையத் தக வல்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அரபு இராச்சியத்துக்கு தொழில் வாய்ப்பிற்காக சென்று, அங்கு பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து, நாடு திரும்ப முடியாமல் இருந்த 268 இலங்கையர்களே இவ் வாறு நாடு திரும்பியுள்ளனர்.

குறித்த அனைவரும் ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானங்களின் ஊடாக நாட்டை வந்த டைந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்துள்ள அனை வரும் தனிமைப்படுத்தல் நடவடிக் கைக்காக தனிமைப்படுத்தல் மையங்க ளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரி விக்கின்றன.

# காணாமல்போனவர்களின் உறவினர்களுக்கு நஷ்டஈடு வழங்கலாம்; அலுவலகம் வேண்டாம்

## வழிக்கு வருகின்றது அரசு



காணாமல்போனோரின் உறவினர் களுக்கு நஷ்டஈடு வழங்குவதாக இருந் தால், அதற்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை என அமைச்சரவைப் பேச்சாளர், அமைச் சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

கண்டியில் இடம்பெற்ற நிகழ்வொன் றின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது, காணாமல் போனோர் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப் பட்ட அலுவலகம் தொடர்பாக எழுப்பப் பட்ட கேள்விக்குப் பதிலளித்த அமைச் சர், காணாமல்போனோர் தொடர்பாக விசாரணை செய்யும் அலுவலகத்தை நீண்டகாலத்துக்குக் கொண்டு செல்ல முடியாது எனவும் அதனை இரத்து செய்ய நேரிடும் எனவும் கூறினார்.

கடந்த காலத்தில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையிலேயே இந்த அலுவலகத்தைத் தாம் நியமித் ததாக அவர் தெரிவித்தார்.

ஜனநாயக சமூகத்தில் தொடர்ந்தும் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள் இருக்குமென தெரிவிக்க முடியாது என் றும் தெரிவித்தார்.

மேலும் அன்று இடம்பெற்ற விடயங் கள் முற்றிலும் மாறுபட்டவையென்றும் யுத்தக்காலப் பகுதியென்பதால் நாளை என்பதே நம்பிக்கையற்ற நிலைமை யாக அன்று இருந்ததாகவும் மக்கள் காணமலாக்கப்பட்டனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளால் முன்னெடுக் கப்பட்ட விடயதானங்கள் பல இருந்தன வென்றும் அது நாட்டில் தொடருமாக இருந்தால் இதனை ஜனநாயக நாடெ னக் கூற முடியாதென்றும் தெரிவித்தார்.

எப்போதும் காணாமல்போனவர் கள் தொடர்வார்களாக இருந்தால் அதற்கு ஆணைக்குழுக்கள் அவசியம் என்றால் நாட்டில் வேறு பிரச்சினைகள் இருப்பதாகவே தோற்றப்பாடு வெளிப் படும் என்றும் ஆனால், அது அந்தப் பிரச்சினைக்கு மாத்திரமானதாகவே இருக்க வேண்டுமென தான் நினைப்ப தாகவும் அவர் இதன்போது குறிப்பிட் டார்.

# ஊவா மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு நீக்கம்: மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட துரோகம்

## கொதிக்கிறார் இராதாகிருஷ்ணன்



ஊவா மாகாணத்தில் தமிழ் கல்வி அமைச்சு நீக்கப் பட்டுள்ளமை, மலையக மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும் என மலையக மக்கள் முன்ன ணியின் தலைவரும், முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகை யிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

இலங்கையில் மத்திய மாகாணத்தில் 522 தமிழ் பாடசாலைகளும், ஊவா மாகாணத்தில் 222 தமிழ் பாடசாலைகளும் உள்ளன. இவ்விரு மாகாணங்களி லும் தமிழ்மொழி மூல கல்வி மேம்பாட்டுக்காக தமிழ் கல்வி அமைச்சுகள் உருவாக்கப்பட்டிருந்தன.

1988 இல் தான் மாகாணசபை முறைமை அறிமுகப் படுத்தப்பட்டது. அன்றிலிருந்து மலையக மக்களுக்கான தோர் உரிமையாக இவை கிடைக்கப் பெற்று வந்தன.

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் இன்றைக்கு ஆறு மாதங்களுக்கு முன்னர் மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சு இல்லாது செய்யப் பட்டது.

தற்போது ஊவா மாகாணத்திலும் தமிழ்க் கல்வி அமைச்சும் பறிக்கப்பட்டுள்ளது. இது பெருந்தோட்ட மக் களுக்கு செய்யப்படும் அநீதியாகும். மலையக மக்க ளுக்கு இழைக்கப்பட்ட துரோகமாகும்.

தமிழ்க் கல்வி அமைச்சு இருந்தால் கல்விப் பணிப் பாளர் நியமனம், ஆசிரியர் நியமனம், சிற்றூழியர் நிய மனம் எனப் பல விடயங்களை செய்யலாம். தமிழ் மொழி மூலக் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த லாம். தற்போது அந்த அமைச்சு இல்லாமல் செய்யப் பட்டமை கல்வி வளர்ச்சியிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். - என்றார்.

## தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாடுகளை கண்டறிய விசேட நாடாளுமன்றக் குழு

தேர்தல் சட்டத்திலுள்ள குறைபாடு களை கண்டறிவதற்கு விசேட நாடா ளுமன்றகுழுவொன்றைஅமைப்பது குறித்தயோசனையொன்றுநாடாளு மன்றத்தில் இன்று (திங்கட்கிழமை) முன்வைக்கப்படவுள்ளது.

குறித்த குழுவிற்கு 15 உறுப்பினர் கள், சபாநாயகரால் தெரிவு செய்யப் படுவதுடன் குறித்த குழு 6 மாதத்துக் குள் தங்களது பரிந்துரைகளை முன்வைக்க வேண்டுமென எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துமாறு பல அரசியல் கட்சிகள், சமூக அமைப் புக்கள் எனப் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்துவது தொடர் பாகப் புதிய சட்டமூலம் தொடர்பாக ஆராயும் ஆளும் கட்சியின் கூட்டம் எதிர்வரும் வாரங்களில் நடைபெற வுள்ளது.

மேலும் மாகாண சபை தேர் தலை நடத்துவதற்கான சட்டமூலம் கடந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பி டத்தக்கது.

## தாயைக் கவனிக்கத் தவறிய மகனுக்கு எதிராக நடவடிக்கை

சிலாபத்தில் தாயை சரியாக கவனித்துக் கொள்ளாத மகனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாதம்பே நகரத்தில் யாசகத்தில் ஈடுபடும் தாயை பொறுப்பேற்குமாறு மக னிடம் பொலிஸார் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

பொலிஸாரின் அறிவிப்பு தொடர்பில் கருத்திற் கொள்ளாத மகனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

சிலாபம், பங்கதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த இந்த தாய் நாத்தன்டிய மற்றும் மாதம்பே பிரதேசத்தில் யாசகம் பெற்று வாழ்ந்து வருவதாகப் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தாய் தொடர்பாக மனிதாபிமானத்துடன் சிந்தித்து அவரைப் பொறுப் பேற்கு மாறு மகனிடம் பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எனினும் பொலிஸாரின் அறிவிப்பிற்கமைய மகன் தாயைப் பொறுப்பேற்காமை யால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

## யாழில் இளைஞன்மீது தாக்குதல் மீட்க வந்தவருக்கும் கத்திக் குத்து!

யாழ். கல்லுண்டாய் பகுதியில் இளைஞன்ஒருவரைஇனம்தெரியாத கும்பல் ஒன்று வழிமறித்து தாக்கி யுள்ளது. தாக்குதலுக்கு இலக்கான இளைஞனை மீட்க வந்த நண்பன் மீதும் கத்திக்குத்து தாக்குதல் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர் பில் மேலும் தெரியவருவதாவது -

யாழ்.நகர் பகுதியில் பாதுகாப்பு உத்தியோகஸ்தராகக் கடமையாற் றும் இளைஞன் கடமை முடித்து கல் லுண்டாய் வீதி வழியாக வீடு திரும் பியுள்ளார்.

அவ்வேளை குறித்த இளை ஞனை வீதியில் வழிமறித்த கும்பல் ஒன்று அவர் மீது தாக்குதலை மேற் கொண்டுள்ளது. காயமடைந்த இளை ஞனை அந்த இடத்தில் விட்டபடி அக் கும்பல் சென்றுள்ளது.

காயத்திற்கு இலக்கான இளை ஞன்தொலைபேசிஊடாகஅராலியில் உள்ள தனது நண்பனுக்கு தகவல் வழங்கியுள்ளார். அதனை அடுத்து தாக்குதலுக்கு இலக்கான இளை ஞனை மீட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல அவரது நண்பன் மோட்டார் சைக்கிளில் சம்பவ இடத் திற்கு சென்ற போது, அராலி பாலத்தடி யில் வைத்து இளைஞனை தாக்கிய கும்பல் மறித்து கத்திக்குத்துத் தாக்கு தலை மேற்கொண்டுள்ளனர்.

அதனை அடுத்து அந்தக் கும்பல் அந்த இடத்திலிருந்து தப்பி சென்ற பின்னர் இரு இளைஞர்களும் மீட்கப் பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

### 4 ஆயிரம் கோடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அச்சிட்டுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:-

கடந்த ஆட்சியின்போது டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் மதிப்பில் சிறிதளவு சரிவு ஏற்பட்ட போது, 'எங்களிடம் ஆட்சியைத் தாருங் கள்; இலங்கை நாணயத்தின் மதிப்பை அதி கரித்துக் காட்டுகின்றோம்' எனத் தற்போது ஆட்சியில் உள்ளவர்கள் அன்று சவால் விடுத்தார்கள்.

ஆனால், அவர்களின் ஆட்சியில்தான் டொலருக்கு எதிரான ரூபாவின் மதிப்பு நாளுக்கு நாள் என்றும் இல்லாத அளவில் சரிவடைந்து செல்கின்றது.

இது அவர்களின் திறமையா? அல்லது, தோல்வியா? என நாம் கேள்வி எழுப்ப விரும் புகின்றோம்.

மார்ச் மாதத்தில் இவ்வாறு அச்சிடப்பட்ட 4 ஆயிரம் கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது? சாதாரண மக்கள் இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளபோது, இந்தப் பணத்தைக் கொண்டு அதிகாரத்தில் உள்ளவர்கள் சுக போகங்களை அனுபவிக்கின்றார்கள் - என்றார்.

### மிருசுவிலில் 40 ஏக்கர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவருக்குச் சொந்தமான காணி கையகப் படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படவுள்ளது என அறியமுடிகின்றது.

மிருசுவில் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியே இவ்வாறு இராணுவத்தின் தேவைக்காக சுவீகரிக்கப்பட வுள்ளது எனத் தெரியவருகின்றது.

புங்குடுதீவில் தற்போது வசிக்கும் மகேஸ் வரி என்பவருக்குச் சொந்தமான குறித்த காணியே இன்று நில அளவைத் திணைக் களத்தினரால் அளவீடு செய்யப்படவுள்ளது.

ஏற்கனவே பல பிரதேசங்களிலும் அள வீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ள முயன்று மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்ட நிலை யில் இன்று நடைபெறவுள்ள குறித்த அளவீ டையும் நிறுத்த மக்களை ஒன்றுதிரளுமாறு சிவில் சமூக அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்துக்கு நொந்துவிடும் என்பதற்காக இனப்படுகொலை நடக்கவில்லையென கூறாதீர்!

அரசாங்கத்துக்கு நொந்துவிடும் என்பதற்காக இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறாதீர்கள் என தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இனவழிப்பு நடைபெற்றது என்பதை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள் போதாது என சர்வதேச நிபுணர்களின் கருத்தைச் சுட்டிக்காட்டி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், யாழில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற ஊடக சந்திப்பில், சுமந்திரனின் கருத்துக் குறித்து சிவாஜிலிங்கத்திடம் கேள்வி எழுப்பப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித்துள்ள அவர் –

இனப்படுகொலை என்பது நேற்று இன்று நடந்தது இல்லை. இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்ற ஒரு விடயம்.

வட மாகாண சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாத்திரமல்லாது மாகாண சபையில் அங்கம் வகித்த அனைத்துக் கட்சிகளின் ஒத்துழைப்போடும் இனப்படுகொலை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இனப்படுகொலை என்பது இன்று, நேற்றல்ல 1977 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையில் இனப்படுகொலை நடந்ததற்குப் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பாக விசாரிக்க வேண்டும் என நாங்கள் ஏற்கனவே கோரிக்கை விடுத்திருக்கிறோம்.




தந்தை செல்வா – பண்டா ஒப்பந்தத்தில்கூட எதிர்காலத்தில் சிங்களக் குடியேற்றங்கள் நடத்தப்படாமல் இருக்க ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1965 ஆம் ஆண்டு காலத்தில் இடம்பெற்ற ஒப்பந்தத்தில்கூட இனப்படுகொலை நடந்தது தொடர்பான விடயங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில்கூட வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழரின் வாழ்வியல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

நான் சுமந்திரனுக்கு இனப்படுகொலை விடயம் தொடர்பாக விளங்கப்படுத்த வேண்டிய அவசியமில்லை. 1983 இல் இனத்தை அழிக்கும் எண்ணத்தோடு மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் அனைவரும் அறிந்ததே.

எனவே, இனப்படுகொலை என்பது ஓர் இனத்தைத் தெரிவுசெய்து படுகொலை செய்ய நினைப்பது என்பதை நிரூபிக்க முடியும். உலகில் எத்தனையோ நாடுகளில் இனப்படுகொலை நடைபெற்றமை நிரூபிக்கப்பட்டுள்ளது. – என அவர் தெரிவித்துள்ளார்.

Anna EXPRESS Courier Services
அண்ணா விரைவும் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
077 8889388
075 3305500
070 3305500
லண்டன் ⇨ 1000/=
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)
எம்முடன் இணைந்து உங்களிடத்தில் பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்புகொள்ளவும்
யாழ்ப்பாணம் சங்கானை கல்வியங்காடு ஆவரங்கால் நெல்லியடி
சங்கத்தானை பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு
கனகராயன்குளம் மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

# வெடி பொருள்களுடன் சந்தேகநபர்கள் நால்வர் பகமுண பகுதியில் கைது

நாவுல – எலஹெர வீதிக்கருகில் அமைந்துள்ள பகமுண பகுதியில் வெடிப்பொருள்களுடன் 4 சந்தேக நபர்களைப் பொலிஸார் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்துள்ளனர்.

மேலும் ஓட்டோ ஒன்றில் இருந்தே 20 கிராம் வெடி மருந்து, 3 கிலோ 230 கிராம் அமோனியா, 14 டெட்டனேட்டர்கள் மற்றும் 135 வோடர் ஜெல் குச்சிகள் ஆகியவற்றைப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அவிசாவலையைச் சேர்ந்தவர்கள் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மரண அறிவித்தல்

பிறப்பு 30 03 1956



இறப்பு 24 03 2021

## கனகசபாபதி தவேந்திரன் (தவே)

யாழ்.நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசபாபதி தவேந்திரன் அவர்கள் கடந்த (24.03.2021) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபாபதி - நாகரத்தினம் (மாணிக்கம்) தம்பதியினரின் கனிஷ்ட புத்திரனும் விசாகரத்தினம் (ராசன்), கருணானந்தன் (தோமஸ் - பிரான்ஸ்), தர்மதேவி (செல்வம் - அவுஸ்ரேலியா), நகுலேந்திரன் (சூட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் யோகநாதன் (அவுஸ்ரேலியா), கலாவதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சுதர்சினி (அவுஸ்ரேலியா), திருவுளன் (அவுஸ்ரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஷ்ணவி(அவுஸ்ரேலியா), சிவகுலன், கஜேந்திரன், திபேந்திரன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse இல் பார்வைக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (06.04.2021) செவ்வாய்க்கிழமை 8.45-10.45 வரை நடைபெற்று தொடர்ந்து 11.20-12.30 வரை இறுதி அஞ்சலி நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

71/17 இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212221594

தகவல்
குடும்பத்தினர்.

# திருட்டுச் சம்பவங்கள் நாட்டில் அதிகரிப்பு

பண்டிகை நாள்களை முன்னிட்டு இந்தக் காலப் பகுதியில் பொது இடங்களில் திருட்டு சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.

அதன்படி தங்க நகைகள் கொள்ளை, பணப்பைகள் திருட்டு, மோட்டார் சைக்கிள் மற்றும் ஓட்டோக்கள் திருட்டு போன்ற சம்பவங்கள் இந்தக் காலகட்டத்தில் அதிகரித்துள்ளன எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மோட்டார் சைக்கிள் சாரதிகளின் குற்றங்களை குறைக்கப் பொலிஸார் நாடு முழுவதும் மேற்கொண்ட கண்காணிப்பு நடவடிக்கையில் 13 ஆயிரத்து 320 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.




● ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
● வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏனைய கட்சிகளை இணைப்போமானால் தமிழ்க் கூட்டமைப்பு பலவீனமடையும்

## என்ற அச்சம் உள்ளது என்கிறார் சுமந்திரன் எம்.பி.



இலங்கையில் இன அழிப்பு நடைபெற்றது என்று கூறினாலும் அதனை நிரூபிப்பதற்கான சாட்சியங்கள், நீதிமன்ற பொறிமுறைக்குள் இருக்கின்றபோதுதான் அதனை நாங்கள் கோரவேண்டும். அந்த சாட்சியங்கள் போதாமல் இருக்கின்றபோது அதனை நாங்கள் கேட்டால் எங்களுக்கு விரும்பத்தகாத பதிலே வந்து சேரும் என ஜனாதிபதி சட்டத்தரணியும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கை சரியான வழியில் பயணிக்கவேண்டுமாக இருந்தால் இலங்கையில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அதுவே இலங்கைக்கு நல்லது எனவும் தெரிவித்தார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பலமாகத்தான் இன்று இருக்கின்றது. மற்றைய கட்சிகளை இணைத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவீனமடைந்து விடும் என்ற அச்சம்தான் இருக்கின்றதே தவிர எங்களை பலப்படுத்துவதற்கு அவர்கள் தேவையில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் கட்சி ஆதரவாளர்களும் கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் மறைந்த மன்னார் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப்புக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டமையைத் தொடர்ந்து கூட்டம் ஆரம்பமானது.

இதன்போது சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பதில் வழங்கினார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர் –

நாங்கள் சர்வதேசத்திடமே இன்று நீதிகோரி நிற்கின்றோம், சர்வதேசத்தின் அறிக்கைகளை நாங்கள் சாதகமாகவே பாவிக்கின்றோம். இந்த அறிக்கைகளுக்கு எதிராக யாரும் கருத்துகளை தெரிவித்தனர் என நான் அறியவில்லை.

இருதரப்பினரும் போர்க்குற்றம் செய்தார்கள் என்று நிபுணர்கள் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேசத்திடமிருந்து எங்களுக்கு நீதியை எதிர்பார்க்கலாம் ஆனால் நாங்கள் சொல்வதையே அங்கிருந்தும் சொல்ல வேண்டும் என்பதை யாரும் எதிர்பார்க்கமுடியாது. அனைத்து பக்கங்களையும் விசாரணைசெய்து சரியான தீர்மானங்களையே அவர்கள் எடுப்பார்கள்.

விசாரணைகள் நடந்துமுடிந்துவிட்டது. அதனை நீதிமன்ற பொறிமுறைக்குள் கொண்டுசெல்லவேண்டுமாகவிருந்தால் அதுகட்டாயமாகும்.

வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றியது இன அழிப்பு தீர்மானம் என்று நாங்கள் கூறினாலும் அதன் இறுதியில் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு என்று சொல்லப்பட்டுள்ளது. அவ்வாறானதொரு சர்வதேச குற்றம் இல்லை. அதிலேயே சொல்லப்பட்டுள்ளது.

கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு இன்னும் சர்வதேச குற்றங்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, அது ஏற்றுக்கொள்ளப்படவேண்டும் என்றுதான் அந்த தீர்மானம் முடிவுறுகின்றது. நாங்களே சொல்லுகின்றோம் இங்கு நடைபெற்றது சர்வதேசக் குற்றம் இல்லையென்று. அதனையே நாங்கள் இன அழிப்பு தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம் என தலையில் தூக்கிவைத்து கொண்டாடி வருகின்றோம்.

இன்று கிழக்கில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்புகள் இன அழிப்பின் ஓர் அங்கமாகவுள்ளது. நாங்கள் அதனை மறுக்கவில்லை. ஒருவரின் மனதில் உள்ள இன அழிப்பு எண்ணங்கள் மாறிமாறிவருவதையே கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு என்று சொல்லப்படும். எனினும் அவ்வாறான இன அழிப்பு சர்வதேச சட்டங்கள் இல்லை.

எனினும் விக்னேஸ்வரன் ஐயா வடமாகாணசபையில் நிறைவேற்றியதை வைத்து இனிவரும் காலங்களில் சேர்த்துக்கொள்வார்களோ தெரியாது.

உண்மைகளை சொல்லவேண்டும். தமிழ் மக்களுக்கு நாங்கள் பாரிய எதிர்பார்ப்பை கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். அவ்வாறு வழங்கி அவர்களுக்கு கிடைக்காததன் காரணமாகவே விரக்தி நிலையில் உள்ளனர்.

குறிப்பாக வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் மனநிலையில் உள்ள விரக்தி நிலையும் அதுதான். சர்வதேசம் எங்களை கைவிட்டுவிட்டது என்ற கருத்துகள் முன்வைக்கப்படுகின்றன. சர்வதேசம் கைவிடவில்லை. நாங்கள் தேவையற்ற வகையில் மக்களுக்கு கூடுதலான எதிர்பார்ப்பை வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

நாங்கள் உண்மை நிலையைச் சொன்னால் இவர் அரசாங்கத்துக்காகப் பேசுகின்றார் என்பார்கள். நாங்கள் அரசாங்கத்துக்காகப் பேசவில்லை உண்மையைச் சொல்லுகின்றோம். பொய்யான எதிர்பார்ப்பை வழங்குவது என்பது பிழையான விடயமாகும்.

30ஆயிரம் பேர் காணாமல்போயிருக்கின்றதற்கான ஆதாரங்கள், சாட்சியங்கள் உள்ள நிலையில் காணாமல்போனவர்களைக்கண்டுபிடித்துத்தருவேன் என்ற எதிர்பார்ப்பை ஒருதாய்க்குக் கொடுப்பது என்பது மிகவும் கொடுமையான செயல். அதன் காரணத்தால் உண்மையைச் சொல்லவேண்டும்.

நீதிகிடைக்கவேண்டும், குற்றவாளிகளுக்கு தண்டனைவழங்கப்படவேண்டும். அதற்கு இயன்றதை நாங்கள் செய்வோம்.

உண்மையைச்சொல்வது ஒருபோதும் துரோகச் செயல் இல்லை.

ஐ.நா. தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளுக்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் நன்றி தெரிவித்து அறிக்கைவெளியிட்டபோது அதனை சிங்கள ஊடகங்கள் 'இலங்கைக்கு எதிராக செயற்பட்ட நாடுகளுக்கு நன்றி தெரிவித்தார் சுமந்திரன் எம்.பி. என்று செய்திவெளியிட்டபோது சிங்கள மக்கள் மத்தியிலிருந்து எதிரான கருத்துகள் வெளிப்பட்டன.

சிங்கள மக்கள் மத்தியிலும் துரோகி தமிழ் மக்கள் மத்தியிலும் துரோகியாக நான் சொல்லப்படுகின்றேன். தமிழ் மக்களின் எதிர்பார்ப்பிற்காக நாங்கள் தீர்மானம் நிறைவேற்றப்படவேண்டும் என்று உழைத்தோம். அதனை நாங்கள் மறுக்கவில்லை.

இது இலங்கைக்கு எதிரான தீர்மானம் இல்லை. இலங்கை சரியான வழியில் பயணிக்கவேண்டுமாக விருந்தால் இலங்கையில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அதுவே இலங்கைக்கு நல்லதாகும்.

இலங்கையில் குற்றம் செய்தவர்கள் தப்பிச்செல்வது இலங்கைக்கு நல்லதல்ல. அதற்கு உதவியாக சர்வதேசம் வருகின்றபோது அது இலங்கைக்கு எதிரான தீர்மானம் இல்லை.

ஆனால் இலங்கை ஆட்சியாளர்களுக்கு அது எதிரான தீர்மானம். ஆட்சியாளர்கள் அதனை தடுக்கின்றனர் . செய்யவிடாமல் குறுக்கே நிற்கின்றனர்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தத் தடவை நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மிகவும் முக்கியமான தீர்மானம். இப்படியான தீர்மானமொன்று நிறைவேற்றப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. காரணம் 47 நாடுகளை நாங்கள் எடுத்துப்பார்த்தபோது அது சாதகமாக இருக்கவில்லை. ஆனபடியால் இம்முறை மிகவும் கடினம் என நினைத்திருந்தோம். மனித வுரிமை உயர் ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட் அம்மையார் மிகமிக சக்தி வாய்ந்த காட்டமான ஓர் அறிக்கையை முதலில் வெளியிட்டார். டிசெம்பர் மாதமே இந்த அறிக்கை இலங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டது. மனிதவுரிமை உயர் ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட் அவர்களும் சித்திரவதையால் பாதிக்கப்பட்ட ஒருவராவார்.

சிலி நாட்டிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அந்த நாட்டின் ஜனாதிபதியாகவும் இருந்தவராவார். அவருக்கு சர்வதேசத்தில் விசேடமாக மனித உரிமைகள் ஆணையகத்தில் மிகப் பெரிய மதிப்பு இருக்கின்றது. அந்த அம்மையாரின் அறிக்கை காரணமாக பல நாடுகள் அதற்கு மாறாகச் செல்லத் தயாராக இல்லை. அதனால் தான் தென் அமெரிக்காவில் பல நாடுகள் இதற்கு சாதகமாக வாக்களித்தன. ஏனென்றால் மிச்சேல் பச்லெட் அம்மையாரைப் பற்றி அந்த நாட்டின் பல ருக்குத் தெரியும்.

47 நாடுகள் கொண்ட சபையில் எங்களுக்கு ஆதரவு குறைவாக கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த வேளையில் அவரின் அறிக்கை காரணமாக அது மாற்றம்பெற்றது.

மனித உரிமை பேரவையால் இலங்கையைக் குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டுசெல்லமுடியாது. அதற்கான அதிகாரம் மனித உரிமை பேரவைக்கு இல்லை. நாங்கள் போராட்டங்களை நடத்தி, சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி, உண்ணாவிரத போராட்டத்தில் பத்து பேர் உயிரிழந்திருந்தாலும் மனித உரிமை பேரவையால் அதனைச் செய்யமுடியாது. பாதுகாப்பு சபைக்கு மட்டுமே குற்றவியல் நீதிமன்றுக்கு கொண்டுசெல்வதற்கான அதிகாரம் உள்ளது.

நாங்கள் கேட்டது பாரப்படுத்தலுக்கான பொறுப்புக்கூறலுக்கு ஏதுவான காரணியை மனித உரிமைப் பேரவைக்கு வெளியில் கொண்டுசெல்லுங்கள் என்று கோரியிருந்தோம். அது வெளியே விடப்பட்டுள்ளது. நாங்கள் கேட்டதற்கு அமைவாக அதுவெளியே விடப்பட்டுள்ளது.

முன்னைய 30/1, 34/1, 40/1 தீர்மானங்களில் கலப்பு நீதிமன்ற முறை சொல்லப்பட்டிருந்தது. இந்தத் தடவை அது சொல்லப்படவில்லை. அதுமட்டுமன்றி ஒரு முழுமையான நீதிமன்ற பொறிமுறையின் கீழ் பொறுப்புக்கூறல் கொண்டுசெல்லப்படவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

முதல் வரைவில் சாட்சியங்களைப் பாதுகாப்பதும், அதைப் பரிசீலிப்பதற்கு என்ற இரண்டு சொற்கள் மட்டுமே இருந்தன.

ஆனால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் சாட்சியங்களை சேகரிப்பதற்கும் என்ற சொல் சேர்க்கப்பட்டுள்ளது. இது மிகவும் முக்கியமானது. நாங்கள் கேட்ட முக்கியமான தீர்மானங்களில் இரண்டு தீர்மானத்தில் இருக்கின்றது.

அதனால்தான் நாங்கள் தீர்மானத்தை வரவேற்றோம். சிலர் இந்தத் தீர்மானத்தில் எதுவும் இல்லை, பிரயோசனமற்றது எனக் கூறுகின்றனர். மக்கள் மத்தியில் தேவையற்ற அதிருப்தியை ஏற்படுத்துவதற்கான பொறுப்பற்ற செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

பொறுப்பாக மக்கள் மத்தியில் செயற்படுவோர் எந்த விடயத்தில் எவ்வளவு சாதிக்கமுடியும் என்ற விடயம் தெரிந்திருக்கவேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சாதிக்க கூடியவற்றை உச்சக்கட்டம் நாங்கள் சாதித்திருக்கின்றோம். இந்தக் பேரவைக் கூட்டத்தொடர் தொடங்கும்போது இதனைக்கூட சாதிக்கமுடியும் என நாங்கள் நினைக்கவில்லை.

நாங்கள் பல விடயங்களை முயற்சி செய்துவருகின்றோம். சில நாள்களில் சில விடயங்கள் மக்களுக்குத் தெரியவரும். எங்கள் முயற்சிகளை நாங்கள் பகிரங்கமாகவும் சொல்லமுடியாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது முழுமையான முயற்சிகளை முன்னெடுத்துள்ளது. வெறுமனே மக்களுக்கு பொய் சொல்லி அவர்களின் எதிர்பார்ப்பை உச்சக்கட்டத்துக்கு கொண்டுசென்று அவர்கள் ஏமாற்றமடையும் செயற்பாட்டை நாங்கள் முன்னெடுக்கவில்லை.

இலங்கை அரசாங்கத்துக்கு பாரிய அழுத்தம் வந்திருக்கின்றது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் மீதான தடைகள் கொண்டுவரப்படுகின்றன. பொருளாதாரத் தடைகள்தொடர்பாகப்பல்வேறுதரப்பினரும்கேட்டிருந்தனர். இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடையை நாங்கள் கோரவில்லை. இலங்கைக்கு எதிரான பொருளாதாரத் தடைவரும்போது அதில் முதலாவதாகவும் மிகவும் மோசமாகவும் பாதிக்கப்படப்போவது தமிழ் மக்களாவர்.

சிலவேளைகளில் பொருளாதார தடையைக் கோரவேண்டிய சூழ்நிலை வரலாம். அதனை நாங்கள் மறுக்கவில்லை. ஆனால் இன்று நாங்கள் அதனைக் கோரவில்லை.

இலங்கைக்குள் தீர்வொன்றை ஏற்படுத்தவேண்டுமானால் சிங்கள மக்கள் மத்தியிலிருக்கின்ற முற்போக்கு சக்திகளும் எங்களுக்கு ஆதரவாகச் செயற்படவேண்டும். அவர்களுடைய ஆதரவையும் நாங்கள் தக்கவைக்க வேண்டும்.

இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடை வருவது ஆட்சியாளர்களுக்கு ஒரு பிரச்சினையே அல்ல. அவர்களுக்கு அது அழுத்தமுமல்ல. அவர்களுக்கு போதுமானளவு வளம் இருக்கின்றது. ஆனால் ஆட்சியாளர்களைக் குறிவைத்து தடைகள் வருமானால் அதுதான் அழுத்தமாகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலமாகத்தான் இன்று இருக்கின்றது. மற்றைய கட்சிகளை இணைத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவீனமடைந்துவிடும் என்ற அச்சம்தான் இருக்கின்றதே தவிர எங்களை பலப்படுத்துவதற்கு அவர்கள் தேவையில்லை.

தமிழ் மக்களின் நன்மைக்காக ஒற்றுமை தேவை. ஆனால் அடிப்படைக் கருத்துகளில் வித்தியாசமாக இருக்குமானால் நாங்கள் இணையமுடியாது. ஒற்றுமை ஒரு கொள்கையில்லை. கொள்கையுடன் ஒன்றுபடுபவர்கள் ஒன்றுசேர்ந்து பயணிக்கமுடியும். - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org